# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 44
விலை ரூபாய் 20.00

தீபம்–44
ஐப்பசி இதழ்–2017 ,ஆரம்பம் 15 மாசி–2013.

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532

LIBRARY

## வானங்கள் இறைவனின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன (தி.பா : 19:01)

## ஆயரின் செய்தி



இறை இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,
எனது அன்பு கலந்த வணக்கங்கள்

நவம்பர் மாதம் இறந்த விசுவாசிகளுக்காக செபிக்கும் மாதம். இறந்த எம்மவர்களை நினைவுகூரும் அதேவேளை எமது வாழ்வு மரணம் பற்றியும் சிந்திக்க, விழிப்போடு செயல்பட வழிபாடுகள் அழைப்பு விடுக்கின்றன.

திருத்தந்தை 15ம் பெனடிக்ட் (1914 – 1922) அனைத்து ஆன்மாக்களின் நினைவை தெளிவுபடுத்தி அன்று குருக்கள் இறந்த விசுவாசிகளுக்காகவும், தமது கருத்துக்களுக்காகவும், திருத்தந்தையின் கருத்துக்களுக்காகவும் மூன்று திருப்பலிகள் நிறைவேற்றலாம் என அனுமதி கொடுத்தார்.

10ம் நூற்றாண்டில் அனைத்து ஆன்மாக்களின் நினைவு ஒக்டோபர் மாதத்தில் சிறப்பிக்கப்பட்டது. பின் 998 – 1030 காலப்பகுதியில் குளுனி சபையைச் சேர்ந்த தூய ஒடிலியோ அனைத்து ஆசீர்வாதிப்பர் சபையிலும் நவம்பர் மாதம் 2ம் நாள் இது சிறப்பிக்கப்பட வேண்டுமென அறிவித்தார். காலப்போக்கில் இவ்விழா உலகெங்கிலும் நவம்பர் 2ம் திகதி கொண்டாடப்பட்டு வந்தது.

அனைத்து ஆன்மாக்கள் தினத்தில் நாம் இறந்தவர்களை நினைப்பதோடு மட்டும் நின்று விடுவதில்லை, இவர்களுக்காக செபிக்கிறோம். ஒறுத்தல்கள் செய்கிறோம். திருப்பலி நிறைவேற்றுகின்றோம். இதன் மூலம் எமக்கும் பலநன்மைகள் வந்தடைகின்றன.

இறந்தவர்களுக்காக செபிப்பது கிறிஸ்தவர் எமது கடமையாகும். உத்தரிக்கிற ஸ்தலம் பற்றிய திருச்சபையின் போதனைகளை ஏற்றுக் கொள்ள பலர் தயங்குகின்ற இக்காலத்தில் உத்தரிக்கின்ற ஆன்மாக்களுக்காக செபிக்க வேண்டிய உணர்வும் கட்டாயமும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இந்நிலையில் பாத்திமா அன்னை காட்சி கொடுத்த 100 வருடநிறைவில் அன்று மரியன்னை மூன்று பிள்ளைகளுக்குக் கொடுத்த செய்தியை இங்கு நினைவு கூறவேண்டும். 1917ம் ஆண்டு ஆகஸ்ட் 19ம் நாள் காட்சி கொடுத்த மரியன்னை செபமாலை செபிக்கும்படியும் "அதிகம் செபியுங்கள். பாவிகளுக்காக அதிகம் செபியுங்கள், ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபடுங்கள், ஏனெனில் செபிப்பதற்கும் ஒறுத்தல் செய்வதற்கும் யாருமே இல்லாததால் நரகத்தில் பல ஆன்மாக்கள் அழிந்து கொண்டிருக்கின்றன" என்றார். இச்செய்தியை இன்று நாங்கள் முக்கியகவனத்தில் எடுத்து இறந்த விசுவாசிகளுக்காக செபிக்க வேண்டும். ஏழைகளுக்கு உதவுதல், வயோதிபர்களைப் பராமரித்தல் போன்ற ஒறுத்தல்களும், சமூக நற்பணிகளும் செய்ய வேண்டும். இப்பின்னணியில்தான் ஒரே திருச்சபையாக நாம் இறந்துபோன எம்மவர்க்காகவும் செபிக்க யாருமே இல்லாத ஆன்மாக்களுக்காகவும் செபிக்க ஒரு சம்பிரதாயம் எம் திருச்சபையில் உள்ளது. தினமும் மாலை 7.00 மணிக்கு ஆலய மணிகள் ஒலிக்கப்படும்.

தொடர்ச்சி 02ம் பக்கத்தில்....




## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை



இடம் : இருதயபுரம்

காலம் : 11 நவம்பர் 2017 சனிக்கிழமை

நேரம் : மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை

**திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.**

## தேசிய ரீதியிலான திருவிவிலியப் போட்டி

## முடிவுகளும் பரிசளிப்பும் - 2017







தொடர்ச்சி 02ம் பக்கத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

Fr .Nc . அருள்வரதன்

புதிய மாதம் பிறந்து விட்டது. உங்களோடு பேசுவதற்கு எனக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு மகிழ்வைத் தருகிறது. இம்மாதத்திலே பல நிகழ்வுகள் உலகளாவிய ரீதியிலே நடைபெறுகின்றன. உலக முதியோர், உலக சிறுவர் தினம், உலக சிறுமியர் தினம், சர்வதேச ஆசிரியர் தினம், சர்வதேச விழிப்புணர்வு தினம், ஐக்கிய நாடுகள் தினம், சர்வதேச வறுமை ஒழிப்புத் தினங்களைக் குறிப்பிடலாம். இன்று சிறுவர் சிறுமியரை எடுத்துக் கொண்டால் அவர்கள் நடாத்தப்படுகின்ற முறைகள் எதிர்நோக்ககின்ற பிரச்சினைகள் இவைகள் சொல்லி விபரிக்க முடியாத நிலையில் உள்ளன. மனித நேயங்களும், மனித மேம்பாடுகளும் வலுவிழந்து போகின்ற நிலைக~ ளிலே தான் இக்குறைபாடுகள் பெருகி வருவதை நம்மால் உணர முடிகிறது.

மேலும் இம்மாதத்திலே உலக மறைபரப்பு தினம் கொண்டாடப்படுகின்றது. மறைபரப்பிலே ஒவ்வொருவருக்கும் பங்களிப்புண்டு. அதை ஒவ்வொருவரும் உணரவும் பங்களிப்புக்களை மேற்கொண்டு பணிபுரிய வேண்டி நிற்போம்.

மேலும் ஆலயத் திருவிழாக்களிலே அலஸ்தோட்டம் தூய பவுஸ்தீனா ஆலயம், தூய பற்றிமா ஆலயம் தம்பலகாமம், தூய யூதாததேயு ஆலயம் இலிங்கநகர், தூய யூதா ஆலயம் சோமபுர ~ மூதூர் இவ்வாலயங்களில் மக்கள் தமது ஆலய விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். அனைவருக்கம் இறை ஆசிருடன் கூடிய வாழ்த்துக்கள்.

இம்மாதத்திலே சர்வதேச விழிப்புணர்வு தினம் கொண்டாடப்படுகிறது. எல்லா நிலைகளிலும் இத்தினம் முக்கியத்தவம் பெறகின்றது. இன்று நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்வுகளைப் பார்க்கும் போது இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் தீச்செயல்களும் வன்முறைகளும் பல்கிப் பெருகி உள்ளன.

அரசியலை நோக்கம் போதும் ஒருநிலைப்பட்ட முடிவுகளாக இல்லாமல் மாறபட்டதும் அதிகாரக் குரோதங்கள் மிக்கதுமாகவே வெளிப்பட்ட வண்ணமுள்ளன. அடிப்படை நோக்கம் ஆட்சியைப் பிடிப்பது. யார் எதைச் செய்தாலும் மக்களுக்கு நலமானதாயின் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் நமது நாட்டிலே நடப்பது முரண்பட்ட முடிவுகளாகவே உள்ளன.

எது எப்படி என்றாலும் ஆட்சியாளர்களும் எதிரணியினரும் நாட்டையும் நாட்டு மக்களையும், நாட்டின் சிறப்பையும் மேன்மையையும் முதன்மைப்படுத்தி செயலாற்ற வேண்டுமென்பதே எல்லோரின் விருப்பமாக உள்ளது. அது நிறைவேற இறைவன் துணைபுரிய வேண்டுமென வேண்டி நிற்போம்.

இம்மாதத்திலே இறைபதமடைந்த அருட்பணியாளர்களுக்காக வேண்டி நிற்பதோடு குருத்துவப்பணியைக் கொண்டாடும் அருட்பணி S. பொன்சியன். அ.ம.தி இவரின் பணி வாழ்வு சிறப்படைய வேண்டுவதோடு எல்லோரும் நல்லதைக் காண வேண்டுமென்றும் எங்கும் நல்லது நடக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்.

## நன்மையைக் காணவே............

Fr .Nc

- ❖ எட்டு வரிக் கவிதைகள்
- ❖ சரியாக வடிவமையுங்கள்
- ❖ எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
- ❖ குலக்கள் மூலம் தெரிவு இடம் பெறும்
- ❖ எல்லோரும் கலந்து கொள்ளலாம்

இதோ கவிதை வரிகள் ☞

- உண்மையில் வாழ்வு உயர்ந்தோங்கி
- துயர்களைத் தாண்டியும் காண்போமே
- துணிவோம் அதனைக் கண்டிடவே
- உயர்வின் நிலைகளைக் கண்டிடுமே
- தூய்மைகள் மறைந்து போவதுண்மை
- தீமைகள் நிறைய வாழ்வினிலே
- பாவம் பழிகளை விலக்கி வாழ்வில்
- நன்மைகளைத் தேடித் தொடரும் போது

1ம் இடம் 400 /-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-

முடிவுகள் :~ மார்கழி இதழில் வெளியாகும்
முடிவுத்திகதி : 25.11.2017

## குட்டிக்கதை

Fr .Nc

ஒரு கடல் தொழிலாளி. அவருக்குப் பலவிதமான கஸ்டங்கள். ஒருமுறை தனது படகிலே நீண்ட தூரம் செல்கின்றார். வழமைக்கு மாறாக நெடுந்தூரம் வந்துவிட்டார். இப்போது அங்கே மீனுக்காக வலையைப் போடுகின்றார். எதிர்பாராத விதமாக மிகப்பெரிய மீன்கள் பிடிபட்டுவிட்டன. படகு நிறைய மீன்கள்.

மீன்களைப் படகிலே போட்டுக் கொண்டு மிகுந்த மகிழ்வோடு கரையை நோக்கித் திரும்புகின்றார். 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்பது அவரது வாழ்விலே உண்மையாகி விட்டதுதானே.

1ம் பக்கத் தொடர்ச்சி....... ஆயரின் செய்தி

அவ்வேளையில் நாம் இறந்த விசுவாசிகளுக்காக செபிப்போம். இதை எமது மறைமாவட்டத்தில் சிறப்பாகக் குறிப்பிட்டு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகின்றோம். இப்பக்தி முயற்சியை நாம் கைவிடாது தொடர்ந்து மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஒக்டோபர் 7ம் திகதி 685 திருப்பாலத்துவ சபை உறுப்பினர்கள் தமது சின்னங்களைப் பெற்றுக்கொண்டார்கள். இந்த சிறப்பான நிகழ்வு பாலையூற்று பங்கில் நடைபெற்றது. இயக்குனர் அருட்தந்தை எஸ். எல். ஜோன்பிள்ளை அடிகளாரையும் ஊக்குவிப்பாளர்களையும் பிள்ளைகளையும் நான் பாராட்டுகின்றேன்.

ஒக்டோபர் 18ம் நாள் உலக ஒற்றுமைக்காகவும் சமாதானத்திற்காகவும் நாம் மறைமாவட்டமாக அனைத்து ஆலயங்களிலும், துறவற இல்லங்களிலும், கத்தோலிக்க நிறுவனங்களிலும், இல்லங்களிலும் செபமாலை செபித்தோம். உலகெங்கிலும் ஒருமில்லியன் பிள்ளைகள் இதே நோக்கத்திற்காக காலை 9.00 மணிக்கு செபமாலை செபிக்க வேண்டுமென்றே ஜெர்மனியில் உள்ள கத்தோலிக்க தொண்டு நிறுவனம் அழைப்பு விடுத்திருந்தது. ஆனால் நாம் மறைமாவட்டமாகவே அதே தினம் காலை 9.00 மணிக்குச் செபமாலை செபித்தோம். இது எமக்குள் ஓர் செபஉணர்வையும் ஒரேமறைமாவட்டமாக, ஒரே கருத்திற்காக, ஒரேநேரத்தில் செபிக்கும் சிந்தனையையும் ஆர்வத்தையும் எமக்குள் உருவாக்கியிருந்தது. இம்முயற்சிக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்த குருக்களையும். பங்குச் சமூகங்களையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

நவம்பர் மாதம் 18ம் திகதி சனிக்கிழமை புனரமைக்கப்பட்ட மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது. பெரிய~ கடை தூய அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள இம்மண்டபத்திற்கு 'யூபிலிமண்டபம்" எனப் பெயர் சூட்டியுள்ளோம். 125 வருட நிறைவில் யூபிலி ஆண்டின் ஒரு நிகழ்வாக இது அமைந்துள்ளது. திறப்புவிழாவைத் தொடர்ந்து அதே மண்டபத்தில் மறைமாவட்ட மேய்ப்புப்பணி வருடாந்த கூட்டம் நடைபெறும். இம்மண்டபம் கருத்தரங்குகள் மற்றும் சமூகக் கொண்டாட்டங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

இம்மாதம் மேலும் பயனுள்ள மாதமாகவும் இறையாசீர் நிறைந்த மாதமாகவும் அமைய வாழ்த்துகிறேன்.

கிறிஸ்துவில்,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்



## மாதம் ஒரு புதுமை

இந்தியாவின் மேற்குவங்கத்தில் மொனிக்கா பேர்சா எனும் பெண் வயிற்றில் கட்டியால் துன்பப்பட்டார். வைத்தியர்கள் கைவிட்டுவிட்டனர். அன்னை தெரேசா மடத்தில் இப்பெண் பராமரிக்கப்பட்டார். துன்பம் காரணமாக இவரால் தூங்கவும் முடியவில்லை. அன்னை தெரேசா இறந்து ஒரு வருட நினைவு தினத்தில் அருட்சகோதரிகள் புதுமை மெடல் ஒன்றை இப்பெண்ணின் வயிற்றில் படும் விதத்தில் வைத்தனர். உடனேயே அப்பெண் தூங்கிவிட்டார். காலை எழுந்ததும் வலி போய்விட்டது. வைத்தியர்கள் மீண்டும் சோதித்துப் பார்த்த போது வயிற்றினுள் இருந்த கட்டி இல்லாமல் போனதை அவதானித்து இது மருத்துவத்தால் விளக்க முடியாத நிகழ்ச்சி என்றனர்.

## செபமாலை நமக்குத் தரும் 53 கருத்துக்கள்

01. கையில் இருந்தாலே பலம் கூடிடும்
02. கழுத்தில் சுமந்தாலே பெருந்துணை சேர்ந்திடும்
03. எப்பொழுதும் தீயவற்றை விலக்கத் துணையாகும்
04. நான் கிறிஸ்தவன் என சொல்லாமல் சொல்லும்
05. நல்ல கிறிஸ்தவனாக (ளாக) மாற துணை செய்யும்
06. பாதுகாப்புத் தரும் நல்ல கேடயமாகும்
07. வீண் பேச்சுக்களை சற்று நேரம் குறைக்கும்
08. உலக சிந்தனைகளிலிருந்து மனதை ஒருநிலைப்படுத்தும்
09. மற்ற தொலைத் தொடர்புகளோடு உழலும் நமக்கு ஓய்வைத் தரும்
10. அலைபாயும் மனதுக்கு ஆறுதல் தரும்.
11. உணர்ந்து தியானிப்போருக்கு பலன் தரும் விருட்சமாகும்
12. உணராமல் சொல்வோரையும் ஒரு கட்டத்தில் சிந்திக்க வைத்து விடும்.
13. குடும்ப அங்கத்தினர் அனைவரையும் ஒருங்கிணைக்கும்.
14. குடும்ப நிகழ்வுகளில் முதன்மையாய் அமர்ந்திடும்.
15. குடும்ப உறவுகளைக் கட்டிக் காத்திடும்.
16. செபிக்க விருப்பமில்லா உறவுகளுக்காக செபிக்கத் தூண்டும்.
17. குடும்பத்துக்காக மட்டுமல்லாது அயலாருக்காகவும் செபிக்கச் சொல்லும்.
18. குடும்பம் முழுமைக்கும் புண்ணியம் சேர்த்திடும்.
19. குடும்பத்தில் பிரச்சினைகளைக் களைய வழிகாட்டிடும்.
20. குடும்பத்தை வழி நடத்திடும் ஒளிவிளக்காகிடும்.
21. மனங்களை மாசின்றி காக்க துணை செய்யும்.
22. மன பாரங்களுக்கு மருந்தாகிடும்.
23. மனவேற்றுமைகளை மறக்கச் செய்திடும்.
24. மனதால் செய்யத் தூண்டும் எச்செயலையும் சீர்தூக்க வைத்திடும்.
25. மனதை விட்டு நீங்கா தீய நினைவுகளை அழித்திடும்.
26. மனதை சற்று நேரம் லேசாக்கிடும்.
27. மன சஞ்சலத்தோடு துவக்கினால் நிச்சயமாக மனதை இலகுவாக்கிவிடும்.
28. எந்த நேரத்திலும் தெம்புத் தந்திடும்.
29. நடுநிசியோ, சாத்தானின் சோதனையோ பயம் போக்கிடும்.
30. அச்சம் தரும் எதையும் எதிர்க்கும்.
31. நடை பயணமோ, வாகன பயணமோ ஒரு நல்ல துணையாகிவிடும்.
32. நம்பிக்கை இழந்த நிலையிலும் நம்பிக்கை தரும்.
33. ஒவ்வொரு முறை தியானிக்கும் பொழுதும் அன்னை மரியின் உடனிருப்பை உணரலாம்.
34. ஒவ்வொரு சிந்தனையும் தாயின் பங்களிப்பை பறைசாற்றும்.
35. ஒவ்வொரு நாளும் செபிக்கையில் அந்நாளே சிறப்படையும்.
36. ஒவ்வொரு மணியாக செபிக்கையில் மனம் அன்னை மரியோடு பயணிக்கும்
37. இந்த மாலை ஜெபமாலை என்பதை உள்ளம் உரைத்துக் கொண்டேயிருக்கும்.
38. செபிக்க அமர்கையில் சாத்தான் வலையெல்லாம் அழிந்து போகும்.
39. செபமாலை செபிக்கயைில் நம் உள்ளத்திலும், நம் இல்லத்திலும் அன்னை மரியாள் கொலுவீற்றிருக்கிறார்.
40. செபமாலையைப் பக்தியோடு உள்ளமும் உடலும் ஒரு முகமாய் கண்களை மூடி செபித்தல் நிறைய பலனளிக்கும்.
41. இத்தகைய செபமாலை செபிக்க நாம் நேரம் ஒதுக்குகிறோமா?
42. இந்த செபமாலையை நேரம் கருதி அவசரமாக சொல்கிறோமா?
43. இந்த செபமாலையை முழு மனதோடு அர்த்தத்தோடு சொல்கிறோமா?
44. அன்னைக்கு மணிமுடியாக சூட்ட நம்மிடம் நேரம் இருக்கிறதா?
45. செபமாலையோடு இயேசுவின் பிறப்பு, வாழ்வு, பாடுகள். உயிர்ப்பு இவற்றில் நாம் பயணித்த அனுபவம் என்ன?
46. வாரம் ஒரு முறையாவது குடும்ப செபமாலை ஒப்புக் கொடுக்க முயற்சிப்போம்.
47. கத்தோலிக்க குடும்பங்களை செபமாலை சொல்ல ஊக்குவிப்போம்.
48. சமாதானம் குன்றிய குடும்பத்தில் செபமாலையின் வல்லமையை தவறாமல் பகிர்வோம்.
49. நண்பர்களிடம் செபமாலையின் மகத்துவத்தை கதையாகச் சொல்வோம்.
50. செபமாலை என் வெற்றிச் சின்னம் என பறைசாற்றுவோம்.
51. வாழும்செபமாலையாக மாற்ற மாற வழி காண்போம்.
52. செபமாலையின் தப்பறையான வினாக்களுக்குச் சரியான பதிலளிக்க அன்னையிடம் வேண்டுவோம்.
53. செபமாலையைக் குறித்து சங்கடப்படுவோர் அனைவருக்காகவும் செபிப்போம்.

நன்றி : சமூக வலைத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்

தொடர் - 08



அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி
(BTh,B.A. (Hons), PGDE, MEd)

## நேர்மை

மனஅமைதியோடும், திடகாத்திரமாகவும், சகல செல்வங்களும் பெற்று ஒருவர் வாழ வேண்டும் எனில் நேர்மை இன்றியமையாததாகும். அதிலும் ஆசிரியர் ஒருவருக்கு நேர்மை மிக முக்கியமான பண்பாக அமைகின்றது. பாடவேளைகளுக்கு பிரமாணிக்கமாக இருப்பது மட்டும் நேர்மை எனக் கூறிவிட முடியாது.

**பாடவேளைக்கு முன்னர்.......**

பாட முன்னாயத்தம் ஆசிரியர் ஒருவரால் மிகக் கவனமாகவும், அர்ப்பணிப்போடும் மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். கற்பித்தலில் ஏற்படும் அனுபவத்திற்கேற்ப முன்னாயத்த நேரம் குறைவானதாகலாம். நல்லாசிரியர் ஒருவர் தனது பாடத்துறையை இற்றைப்படுத்திக்கொள்ளத் தேவையான புத்தகங்களையும், சஞ்சிகைகளையும் தேடி அறிந்து கொள்வார். அந்த வகையில் தன்னை இற்றைப்படுத்துவதோடு தனது மாணவர்களில் பாட அறிவுத்துறையையும் இற்றைப்படுத்திக் கொள்வார்.

**பாடவேளையில்...........**

மாணவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய விடயத்தை எவ்வாறு கொடுக்க வேண்டும் என பயிற்சிக் காலத்தில் ஆசிரியர் அறிவுறுத்தப்பட்டிருப்பார். பாடவேளையில் இதை நடைமுறைப் படுத்த முயற்சிக்க வேண்டும். பாட ஆயத்தம் சிலவேளைகளில் இலகுவாக அமையலாம். ஆனால் ஆயத்தம் செய்த விடயத்தை வகுப்பறையில் கற்பிக்கும் போது பல சவால்கள் ஏற்படலாம். சலிப்பு, சோம்பல், ஆர்வமின்மை போன்ற உணர்வுகள் படிப்படியாக ஏற்படலாம். ஒரே விடயத்தை திரும்பத்திரும்ப கற்பிக்கும் போது பாடத்தில் இருக்கும் ஆர்வம் குறைவடையலாம். கடமைக்காக, கற்பிக்க வேண்டும் என்பதற்காக கற்பிக்கும் நிலைகூட சில சந்தர்ப்பங்களில் ஏற்படுவதுண்டு. இது விளங்கிக்கொள்ளக் கூடியதென்றாலும் பிழையான நேர்மையற்ற செயற்பாடாகும். ஆசிரியர் ஒருவர் பெறுகின்ற ஊதியப்படி (increment) வருடாவருடம் உயர்ந்து செல்கின்றதே அன்றி குறைவடைவதில்லை. ஆசிரியப் பணியின் தொடக்கத்தில் இருந்த ஆர்வம் வருடங்கள் கூடுகின்றபோது கூடிச் செல்ல வேண்டுமே ஒழிய குறைவடைவதில் எந்தவித நியாயமுமில்லை.

ஒரே பணியைத் தொடர்ந்து செய்யும் போது சலிப்புத்தன்மை ஏற்படுவது இயல்பு. கற்பித்தலில் ஆர்வம் குறையாமல் இருக்க வேண்டுமெனில் ஒரேயொரு வழிதான் நடைமுறையில் சாத்தியமாகக்கூடியது. யார் என்னை ஆசிரியப் பணிக்கு அழைத்தார்? இக்கேள்விக்குப் பதில் கல்வி அமைச்சரோ, மாகாண பொதுச்சேவை ஆணையாளரோ, கல்வி அதிகாரியோ, அதிபரோ அல்ல இறைவன் மட்டுமே. இதை உணரும் ஒவ்வொரு ஆசிரியரும் கடமையேற்ற முதல்நாள் முதல் ஓய்வு பெறும் இறுதி நாள் வரையும் அதே ஆர்வத்தோடும், அர்ப்பணிப்போடும், வினைத்திறனோடும் பணிபுரிவார். மலர்ந்த முகம், ஆரோக்கியமான மனபாவம் உடைய ஆசிரியருக்கு இது இலகுவாக சாத்தியப்படக்கூடியது. நகைச்சுவை உணர்வு, மகிழ்ச்சிகரமான கற்பித்தல் இதற்கு உதவக்கூடியதாக இருக்கும்.

நேர்மைக்கு மிக முக்கியமான ஆதாரம் நேரம் தவறாமை ஆகும். ஆசிரியரைப் பொறுத்த வரையில் நேரம் தவறாமை முக்கிய அம்சமாகும். இது ஆசிரியர் ஒருவரின் கடமை என்பதால் மட்டுமல்ல, ஊதியம் பெறுவதால் மட்டுமல்ல மாறாக மாணவனின் ஒழுக்கத்தோடு மிகத் தொடர்புபட்ட விடயமாகும். நேரம் தவறாமையை ஆசிரியர் பின்பற்றவில்லையெனில் மாணவர்களின் ஒழுக்கத்தை மட்டுமல்ல முழுப் பாடசாலையையுமே பாதிக்க கூடியதாகும்.

**பாடவேளையின் பின்.........**

சலிப்பும், சோர்வும் பாடவேளையின் பின்பு எற்படக்கூடியது. திருத்தப்படுவதற்காக குவிக்கப்பட்டிருக்கும் மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகள் ஆசிரியரின் நேரத்தில் பெரும் பகுதியை எடுக்கக்கூடியது. ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களை கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் வாரத்தில் 35 – 40 பாடவேளைகள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இது பெரும் சுமையாக அமையக்கூடியது. இருந்தும் இச்செயற்பாட்டில் இருந்துதான் நல்ல ஆசிரியர் மாணவர்கள் எந்தளவு பாடத்தை புரிந்துகொள்ளுகின்றனர் என்பதைக் கணிப்பிட்டுக் கொள்வார். பிழைதிருத்தம் என்பது தவறுகளை சுட்டிக்காட்டுவது மட்டுமல்ல மாணவர் மேற்கொண்டு முன்னேறுவதற்கு உதவுவதுமாகும். உற்சாகப்படுத்துகின்ற குறிப்புகளும் பாராட்டுக்களும் மாணவர்களுக்கு அவ்வப்போது மிகத் தேவையானவை ஆகும். சிரேஷ்ட மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் மாணவர் ஒருவரின் அப்பியாசப் புத்தகத்தில் திருத்திக்கொள்ள வேண்டிய விடமாக குறிப்பொன்றை எழுதியிருந்தார். குறிப்பிட்ட மாணவன் செல்வாக்குள்ள பணக்கார குடும்பத்தை சேர்ந்தவன். அவனது தந்தை அந்தக் குறிப்பை விரும்பவில்லை. ஆகவே அதை அகற்றும்படி தனது மகன் மூலம் கட்டளை பிறப்பித்திருந்தார். ஆசிரியர் மாணவரை அழைத்து "நான் உனக்கு பொய்யான குறிப்பை எழுதவா? அல்லது உன்னை முன்னேற்றத் தூண்டுகின்ற குறிப்பை எழுதவா" என வினாவினார். மாணவன் ஆசிரியர் சொல்ல வந்ததைப் புரிந்து கொண்டு முன்னேற்றம் காட்டினான்.

"A bad student can ruin himself
A bad teacher can ruin an entire generation"
- Author Unknown

தொடரும்-----

# துாய குவாடலூப்பே திருத்தல செய்திகள்

துாய குவாடலுப்பே திருத்தல பெருவிழாவானது செப்டம்பர் மாதம் 15ம் திகதி பங்குத்தந்தை அருட்பணி .B .ஜெயபாலன் அமதி அடிகளாரால் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு , 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய கிறிஸ்ரியன் நோயல் இம்மனுவேல் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. நவநாட்களில் பல்வேறு தலைப்புக்களில் அருட்பணி.S.மதுராங்கன் குரூஸ், அருட்பணி. T.கிங்ஸ்லி றொபட் , அருட்பணி G.நிதிதாசன் , அருட்பணி.S.அந்திரியாஸ் பெர்னாந்து அமதி, அருட்பணி யூட் ஜோன்சன் , அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்க ஆகியோர் பொதுநிலையினரை ஆன்மீக பாதைக்கு வழிநடத்தியதுடன் , பொது நவநாளினை அருட்பணி.J.அனிஸ்ரன் மொறாயஸ் இ.ச அவர்கள் செயற்படுத்தினார். செப்டம்பர் 23ம் திகதி காலையில் அதிவந்தனைக்குரிய ஆயர் கிறிஸ்ரியன் நோயல் இம்மனுவேல் ஆண்டகை அவர்களால் உறுதிப்பூசுதலும் புது நன்மையும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் குவாடலூப்பே திருத்தல கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தால் துாய ஜோசேப் வாஸ் ஆண்டினை சிறப்பிக்கும் முகமாக குவாடலூப்பே திருத்தல, பள்ளத்தோட்டம் துாய வேளாங்கன்னி ஆலய மறைக்கல்வி மாணவர்களிடையே நடாத்தப்பட்ட துாய ஜோசேப் வாஸ் வினாவிடை தொடர் போட்டியில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்ற 15 மாணவர்கட்கான பரிசில்கள் ஆயர் அவர்களால் துாய வேளாங்கன்னி ஆலய திருவிழாவில் வழங்கப்பட்டன.

*தகவல்: ச. அன்ரனிதாஸ்*

புகைப்படம் 12ம் பக்கத்தில்......

# புலமைப்பரிசில் பரீட்சையில் தி / துாய லூர்து அன்னை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் 08 மாணவர்கள் சாதனை

தி/லூர்து அன்னை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 08 மாணவர்கள் வெட்டுப் புள்ளி களுக்கு மேல் புள்ளிகளைப் பெற்று, எமது மறைமாவட்டத்திற்கும், பங்கிற்கும், வலயத்திற்கும், பாடசாலைக்கும் புகழ் சேர்த்துள்ளனர்.

08 மாணவர்களான செல்வன்.விவேகானந்தன் கிளின்டன் (169), செல்வி.ஜறின் க்ளோறியா லெப்பன் (152), செல்வன்.தர்மலிங்கம் கீர்த்திகன் (163), செல்வன்.அன்ரனிதாஸ் டிலுக்சன் (156), செல்வி..கிஸோக்குமார் துளசிக்கா (163), செல்வி.தியாகேஸ்லரன் கவிஷாளினி (170), செல்வி.நந்தகுமார் மிஷாலி (157), செல்வி.நாகராஜா இஷாந்தி (152) இவர்களுடன் பங்குத்தந்தை, அதிபர் அருட்சகோதரி.மேரி மெற்றலின் திரேசா, மற்றும் பாடசாலை ஆசிரியர் குழாமினரும் காடசியளிக்கின்றனர். இந்த மாணவர்களை வாழ்த்துவதோடு, எதிர்காலத்தில் இவர்கள் கல்வியில் சிறந்து விளங்கவும் இறையாசீர் வேண்டுவோம்.

புகைப்படம் 12ம் பக்கத்தில்...........

# திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் நிகழ்வுகள்

திருகோணமலை மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ வாழ்வு சமூகம் இயங்கும் பேராலயப் பங்கு , குவாடலூப்பே பங்கு , இறையிரக்க திருத்தலம், செல்வநாயகபுரப் பங்கு , உவர்மலைப் பங்கு கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினர்கட்கான ஒரு நாள் தியானமானது ஒக்டோபர் மாதம் 05ம் திகதி வெல்வெரி தூய யாகப்பர் ஆலயத்தில் , மட்டக்களப்பு புளியக்குடா தூய செபஸ்தியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி லோறன்ஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. இதில் பாவமன்னிப்பு , எமக்கான இறை திட்டம் என்ன, தூய இஞ்ஞாசியாரின் தியானங்கள் தொடர்பான ஒரு அறிமுகமும் வழிநடத்தல்களும் போன்ற தலைப்புக்களில் தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். இத்தியானத்தில் 27 உறுப்பினர்கள் கலந்து தமது பணிகளில் , வாழ்க்கையில் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன், ஆன்மீக கருத்துக்களையும் உள்வாங்கிக் கொண்டனர்.

*தகவல் : ச. அன்ரனித்ாஸ்*
கிறிஸ்தவ வாழ்வு சமூகம், திருகோணமலை மறைமாவட்டம்

புகைப்படம் 12ம் பக்கத்தில்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தில் பொறுப்புணர்வு
## பிள்ளைகள் மற்றும் திருமணத்தின் மட்டில் நெறிமுறைகளின் பூரணத்துவம்



அருட். சகோ . எமர்சன் றாகல்
மெய்யியல் பீடம்,
தேசிய குருமடம்

கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் திருமணத்திற்கு ஓர் தனித்துவமான இடம் உள்ளது. திருச்சபைச் சட்டம் எண் 1055.1 இற்கேற்ப திருமணம் என்னும் உடன்படிக்கையானது தன் இயல்பிலே மணமக்களின் நலனுக்காகவும் மகப்பேறு மற்றும் குழந்தை வளர்ப்புக்காகவும் அமைந்துள்ளது. இன்றும் இப் பாரம்பரியம் விசேட அம்சமாய் திருமணத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சமூகவியலின் கருத்துக்களுக்கேற்ப, அனேகமான நவீனகால திருமணம் பற்றிய எண்ணக்கருக்கள் குழந்தை வளர்ப்பு பற்றி கவனத்தில் கொள்ளும் போது மாத்திரம், தனக்கென ஒரு திருமணத்தைப் பற்றி ஆலோசிக்கத் தொடங்குகின்றனர் எனக் கூறப்படுகின்றது. எனினும் எவ்வகைக் கருத்துக்கள் இருப்பினும், ஓர் உண்மையான யதார்த்தத்தை நாம் மறுக்க முடியாது. தாம்பத்திய உறவு குழந்தைச் செல்வங்களினால் ஆயுள்கால பொறுப்புணர்வை ஏற்படுத்துகின்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

மேலும் சில எழுத்தாளர்கள் திருமணம் பற்றி பிள்ளைகளின் வருங்கால நல்வாழ்வினை கருத்திற் கொண்டு பல கருத்துக்களை எழுதியுள்ளனர். திருமணத்தின் நோக்கங்களில் ஒன்றான 'குழந்தை வளர்ப்பு ', என்றும் கிறிஸ்தவ குடும்பங்களின் நன்நெறிமுறைகளில் முக்கிய இடத்தை பெற்று வருகின்றது. குழந்தை வளர்ப்பு பற்றிய திருச்சபையின் பொறுப்பு பெற்றோர். ஞானப்பெற்றோர், ஞானமேய்ப்பர்கள், பெரியோர், ஆசான்கள் என பலரின் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

### 01. குழந்தை நல்வாழ்வில் உறவுகளின் முக்கியத்துவம்.

சமூகவியலாளர் ஜோன் டாவிஸ் தன்னுடைய புத்தகமான " A Preferential Option for the Family" இல் குழந்தைகள் நல்வாழ்வு பெற வேண்டுமெனில், அமைதியான மனநிலை கொண்ட குழந்தைகள் வளர வேண்டுமெனின், ஆரோக்கியமான பிணைப்பில் உருவான குடும்பங்களில் இருந்து மாத்திரமே கொணர முடியும் என எழுதியுள்ளார். மேலும் அவர், திருமணம் முழுமையடையும் போது குழந்தைகளின் நல்வாழ்வு வளம்பெறுகின்றது. ஆனால் விவாகரத்து, இளவயதில் கருத்தரித்தல் அல்லது முறிவடைந்த குடும்பங்களின் குழந்தைகள் துன்பங்களை அனுபவிக்க வேண்டியவர்களாக உள்ளனர் என கூறியுள்ளார். எனவே ஒரு குழந்தையின் எதிர்காலம் வெற்றிகரமானதாகவோ அல்லது தோல்வியானதாகவோ இருக்க வேண்டுமெனின் திருமணத்தினதும், குடும்பங்களினதும், பூரணத்துவத்திலேயே தங்கியுள்ளது. திருமணத்தின் பிணைப்பு பாதுகாக்கும் முதன்மையான காரணியாக 'குழந்தைகள்' இருக்கின்றனர் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

01.

**1. குழந்தைகள் மற்றும் திருமணத்திற்குமிடையிலான பிணைப்பு**

குழந்தைகள் மற்றும் திருமணம், இரண்டிற்கும் இடையில்ான பிணைப்பை நோக்கும் போது எமக்கு இருவகையான முன்னோக்குப் பார்வையில் நாம் நோக்க வேண்டியதாக உள்ளது.

1. திருமண உடன்படிக்கை பற்றிய முன்னோக்கு
2. குழந்தைகளின் நல்வாழ்வு பற்றிய முன்னோக்கு

பிரான்சிய தார்மீக இறையியலாளர், சேவியர் லக்ரொய்ஸ், திருமண உடன்படிக்கை பற்றி கூறுகையில் திருவருட்சாதனம் என்ற முறையில் திருமணத்தில், பெற்றோரை இணைக்கும் பிணைப்பு குழந்தைகள் அல்ல. வெளிக்காரணங்களினால், அதாவது குழந்தை வளர்ப்புக்காக திருமணம் செய்துகொள்ள முடியாது.

இப்பிணைப்பு அன்பை அடிப்படையாகக் கொண்டு, திருமண உடன்படிக்கையின் நிமித்தமே, கணவனும் மனைவியும் இணைய வேண்டும் என கூறப்படுகின்றது. திருச்சபை சட்டம் எண் 1134 இற்கேற்ப திருமணம் பற்றி வெளிப்படுத்துகையில் செல்லத்தக்க ஒரு திருமணத்திலிருந்து மணமக்களிடையே ஒரு பிணைப்பு எழுகிறது. இப்பிணைப்பானது தன்னியல்பிலேயே நிரந்தரமானது. தனி உரிமை கொண்டது. மேலும் கிறிஸ்தவ திருமணத்தில் மணமக்கள் தங்கள் நிலைக்குரிய கடமைக்காகவும் மாண்புக்காகவும் ஒரு தனிப்பட்ட அருளடையாளத்தால் வலுப்பெற்று, ஒருவிதத்தில் திருநிலைப்படுத்தப்படுகின்றனர். அனுபவ ரீதியான ஆய்வின்படி ஆரோக்கியமான திருமணச்சேர்க்கை குழந்தைகளின் நல்வாழ்வுக்கு பாரிய பங்களிப்பை வழங்குகின்றது, என்பதை மறுக்க முடியாது. எனவே திருமணம், குழந்தைகளை மாத்திரம் கருத்திற்கொண்டு செய்து கொள்ளப்பட்டால் பிணைப்பின் உன்னத தன்மை குறைக்கப்பட்டு விடுகிறது.

இரண்டாவது முன்னோக்கினை ஆராயும் போது நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது திருமணத்தினால் குழந்தைகளின் நல்வாழ்விற்கான வாய்ப்பு என்னவென நோக்குவது மட்டுமே. அமெரிக்க தார்மீக இறையியலாளர், டேவிட் வைட்மோர், தன்னுடைய கருத்துக்களைப் பதிவு செய்யும் போது, குழந்தைகளை இன்றைய சூழ்நிலையில் பொருட்களாக, நுகர்வுப் பொருட்களாக அல்லது ஆதாயம் இல்லாத தொல்லைக்குரியவர்களாக காணும் அபாயம் எழுந்துள்ளது. ஆனால் கிறிஸ்தவ பாரம்பரியத்தில் இவற்றிற்கு எதிர்மாறாக குழந்தைகள் இறைவனால் கொடுக்கப்பட்ட பரிசு எனவும், அன்பிற்கான அழைப்பு எனவும் கருதுகின்றனர். நற்செய்தியில் கூட இயேசு சிறுபிள்ளைகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதை (மாற் 10: 13~14, மத் 19: 13~14, லூக் 18: 15~18) நாம் காணலாம். சில எழுத்தாளர்கள் குழந்தைகளை 'வெறுமையான மட்பாண்டங்களாக' கருதுகின்றனர். காரணம் என்னவெனில் வெறுமையாய் உள்ள பாத்திரங்களாய் இருப்பவர்கள் அறிவாலும், ஞானத்தாலும் நிரப்பப்பட்டு நல்ல பிரஜைகளாக சமுதாயத்தில் திகழ வேண்டுமென கூறுகின்றனர்.

தொடரும்........................

---

ஹாய் குட்டிஸ்
திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 33
1குறிப்பேடு 16 ~ 29 அதி வரை
விடைகள்

01. தாவீது ஆண்டவருக்கு நன்றிப் பாடல்களைப் பாடும் பொறுப்பை யார் யாருக்கு முதன் முதலாக அளித்தார்?
விடை :.........................................................................
02. வாக்குகள் அனைத்தையும், காட்சி முழுவதையும் அப்படியே தாவீதிடம் அறிவித்தது யார்?
விடை :.........................................................................
03. செருபாவின் மகன் அபிசாய் எந்தப் பள்ளத்தாக்கில் எத்தனை ஏதோமியரை வெட்டி வீழ்த்தினார்?
விடை :.........................................................................
04. இஸ்ரயேலருக்கு முன்பாக புறமுதுகிட்டு ஓடியது யார்?
விடை :.........................................................................
05. ஒவ்வொரு கையிலும், காலிலும் ஆறு ஆறு விரல்களைக் கொண்ட அரக்கர் இனத்தானான நெட்டையன் இருந்த ஊரின் பெயர் என்ன?
விடை :.........................................................................
06. ஆண்டவர் இஸ்ரயேலின் மேல் கொள்ளை நோயை அனுப்பியதில் எத்தனை பேர் மாண்டனர்?
விடை :.........................................................................
07. யார் திருக்கூடாரத்தையும் வழிபாட்டுக்கான அனைத்துக் கலங்களையும் இனிச் சுமக்க வேண்டியதில்லை ன்று தாவீது கூறினார்?
விடை :.........................................................................
08. நீ மனவலிமை கொள், திடம் கொள்................... உன்னைக் கைவிடார்' யார் யாரை நோக்கி கூறியது?
விடை :.........................................................................
09. யார் சபையார் அனைவரையும் நோக்கி 'உங்கள் கடவுளாகிய ஆண்டவரை வாழ்த்துங்கள்' என்றார்?
விடை :.........................................................................
10. முதியோரும், இளையோரும், ஆசிரியரும், மாணவரும் யாவரும் ஒன்று போல் எதன் மூலமாக முறைபணிக்கு நியமிக்கப்பட்டனர்?
விடை :.........................................................................

பெயர் :.........................................................

முகவரி :.........................................................

பங்கு : .........................................................

தரம் : .........................................................

முடிவுத்திகதி : 25.11.2017

---

## திருமறைக்கல்வி நிலையத்தால் நடாத்தப்பட்ட விவிலியக் கண்காட்சி

❖ போட்டிகளாக இவை நடாத்தப்படவில்லை.
❖ மதிப்பீட்டாளர்களின் எணிப்பின்படி,
 ❖ தூய மத்தேயு நற்செய்தி : கந்தளாய்ப்பங்கு
 ❖ தூய யோசேப் வாஸ் : பாலையூற்றுப் பங்கு
 ❖ குடும்ப அருட்பணிகள் : பேராலயப்பங்கு
ஆகிய கண்காட்சிகள் தரமானதாக
தெரிவு செய்யப்பட்டுள்ளது.
❖ பல பங்குகள் ஆர்வமுடன் பங்களிப்புச் செய்திருந்தன. காட்சிப்படுத்திய ஏனைய பங்குகளுக்கும் அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.
❖ இவ் அன்பளிப்புக்கள் மறையாசிரியர்களுக்கு நடைபெறும் ஒளிவிழாவில் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.
❖ ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் பங்குபற்றிய ஒவ்வொருவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும்.

தகவல் : திருமறைக்கல்வி நடுநிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் மகிழ்வு

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது ஊக்கவுரை

அருட்தந்தை. ஏ.ஏ. நவரெட்ணம்
விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

'அன்பின் மகிழ்வு' என்கின்ற 'திருமணம் ~ குடும்பம்' குறித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது ஊக்கவுரை மிகவும் நீண்டதொரு மடலாகும். இதன் தமிழ் மொழியாக்கமும் நமது கரங்களில் கிடைத்துள்ளன. ஆயினும் அனைவரும் இதனை முழுமையாக வாசிக்க மாட்டார்கள் என்பது நிதர்சனமான உண்மை. ஆயினும் திருச்சபை இல்லத் திருச்சபைகளால் (குடும்பங்களால்) ஆனது. எனவே அனைவரும் இதனை வாசித்து புரிந்து கொள்ளும் வகையில் ஊக்கவுரையின் ஒவ்வொரு இலக்கத்தினதும் சாராம்சத்தையும் மிகவும் சுருக்கமாகத் தருவதே இக்கட்டுரையின் நோக்கம். இது ஒரு தொடராக 'திருமலைத் தீபம்' மாதாந்த பத்திரிகையில் ஒக்டோபர் இதழிலிருந்து வெளிவருகின்றது. படித்து பயனடையுங்கள்.

உள்ளடக்கம்

"முன்னுரை" (1~7);
"இறைவார்த்தையின் ஒளியியல்" (8~30);
"குடும்பங்களின் அனுபவங்களும், சவால்களும்" (31~57)
"குடும்பத்தின் அழைப்பு (58~88);
"திருமணத்தில் அன்பு" (89~164)
"அன்பை பலனுள்ளதாக ஆக்குதல்" (165~198);
"சிலமேய்ப்புப்பணி கூறுகள்" (199~258);
"குழந்தைகளுக்குச் சிறந்த கல்வியை நோக்கி" (259~290);
"பலவீனமான நேரங்களில் வழிநடத்தி, தேர்ந்து தெளிதல்" (291~312);
"திருமணம் மற்றும் குடும்பத்தின் ஆன்மீகம்" (313~325)

ஆகிய தலைப்புக்களில் ஒன்பதுக்கு மேற்பட்ட பிரிவுகளாக இம்மடல் வழங்கப்பட்டுள்ளது.

" உறுதியான குடும்பங்களே, நலமான சமூதாயத்தைக் கட்டியெழுப்புபவை எனறும், அன்பு, மதிப்பு மற்றும் பிறரோடு உறவில் வளர்வதற்கு, பிள்ளைகள் இத்தகைய குடும்பங்களிலே கற்றுக்கொள்வார்கள் என்றும் இம்மடல் கூறுகின்றது.

" அதேநேரம், குடும்ப வாழ்வில் எதிர்நோக்கப்படும் பல சவால்களுக்குக் காரணம் காட்டுவதையும், திருஅவையின் போதனைகளுக்கு ஏற்ப வாழாதவர்களைக் குறை கூறுவதையும் தவிர்த்து, அவர்கள்மீது அக்கறை காட்டுமாறு, கத்தோலிக்கரை விண்ணப்பித்துள்ளது இம்மடல்.

• குடும்பங்கள் பற்றிய தெளிவான புரிதல் அவசியம் என்றுரைக்கும் திருத்தந்தையின் "அன்பின் மகிழ்வு" மடல் தனிநபர்களுக்குத் தேவைப்படும், தனிப்பட்ட மற்றும் மேய்ப்புப்பணி சார்ந்த அக்கறை குறித்தும் கவனம் செலுத்தியுள்ளது.

**முன்னுரை இலக்கங்கள் 1-7**

இல:~ 1.இன்றைய நவீன உலகிலும் திருமணம், குடும்பம் என்பவற்றுக்கு விருப்பமுண்டு என்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும் என அழைக்கின்றது.

இல:~ 2. திருமணத்திலும், குடும்பத்திலும் சவால்கள் உண்டு. அவைகள் நமது நம்பிக்கையின் ஒளியில் வெளிக்கொணரப்பட வேண்டும்.

இல:~ 3. இத்திருத்தூது ஊக்கவுரையின் நோக்கம் யாதெனில் தனிப்பட்டவர்கள் வாழ்வில் நல்ல நடைமுறை முடிவுகளை மேற்கொள்ள பொதுவான வழிகாட்டிகளை வழங்குவதாகும்.

இல:~ 4. இதுவொரு குடும்பம் பற்றிய இரண்டாண்டுகால ஆயர் மன்ற செயற்பாட்டிலும், திருத்தந்தையின் தனிப்பட்ட கணிப்புக்களாலும் உருவான கனியாகும்.

இல:~ 5. குடும்பங்கள் தங்களது நல்ல விழுமியங்களில் வளர ஊக்கப்படுத்துவதுடன், அவர்களது பலவீனங்களில் பலன் நாடச் செய்யப்படவும் வேண்டும்.

இல:~ 6. இத் திருத்தூது ஊக்கவுரையானது விவலியம் மற்றும் திருச்சபையின் படிப்பினைகளின் ஒளியில் ஆராய்ந்து குடும்பத்தையும் அதன் நடைமுறை மேய்ப்புப்பணி பயிற்சி குறித்தும் உறுதிப்படுத்தும்.

இல:~ 7. இதுவொரு நீண்ட ஊக்கவுரை, இது மிகவும் அவதானமாக படிக்கப்பட வேண்டும் வெவ்வேறுபட்ட மக்களுக்கு ஊக்கவுரையின் வெவ்வேறு பகுதிகள் தங்களது வாழ்வின் நிலைக்கு பொருத்தமானதாகக் கண்டு கொள்வார்கள்.

(அடுத்த இதழில் முதலாம் அலகு தொடரும்.......)

# தூய யோசேப் வாஸ் ஆண்டு

தூய யோசேப் வாஸ் இலங்கையில் முன்னெடுத்த மறைபரப்புப் பணிகளுக்கு உதவியாக பலகுருக்கள் கோவாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களுள் இருவரின் விபரங்களை சுருக்கமாகத் தருகிறோம்.




## 1.பணி ஜோசப் கர்வாலு.

• இவர் வாஸ் அடிகளின் சகோதரியின் மகன்.
• வாஸ் அடிகளிடம் இலத்தீன் கற்றார்.
• 1691ல் குருவாகினார்
• 1696 மாசிகோவாவிலிருந்து பணி ஜோஸ் த மெனசெஸ் அடிகளோடு இணைந்து வந்தபோது கர்வாலு அடிகள் சுகவீனமுற்றார். பயணம் தொடர முடியவில்லை.
• 1697 ஜனவரி கர்வாலு அடிகள் புத்தளம் வந்து சேர்ந்தார்.
• 1701ல் விமலதர்மசூரியன் வைத்தியம் படிக்க விரும்பியதால் போர்த்துக்கேய நூலொன்றினை தமிழில் மொழிபெயர்க்க வாஸ் அடிகளை அழைத்தார்.
• வண.பிதா கர்வாலே வாஸ் அடிகளின் மருமகன்.• இருவரும் மொழிபெயர்க்க அரண்மனை சென்று வந்தனர்.
• மெனெசஸ் அடிகளும் பெர்ராவு அடிகளும் சுகவீனமுற்றதால் வாஸ் அடிகள் கர்வாலே அடிகளை உதவிக்கு புத்தளம் அனுப்பினார். கர்வாலே அடிகள் புத்தளத்திலும் மாதோட்டத்திலும் பல பணிகள் செய்தார். இதனால் இவரும் நோய்வாய்ப்பட்டார்.
• இவர் மீண்டும் கண்டிக்கு வர அரசன் தனது வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சையளித்தான்.
• சிகிச்சை பயனளிக்காது போக 1702 ஆடி 22ல் மாரடைப்பால் கர்வாலே அடிகள் காலமானார்
• மக்கள் திரண்டு வந்து மரியாதை செலுத்த கண்டி ஆலயத்தினுள்ளே அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

## 2.பணி பெட்றோ டி சல்டானோ (Pedro de Saldanha)

• இவர் 40 வயதளவில் ஒறற்றோரியன் துறவற சபையில் சேர்ந்தார்.
• கர்வாலே அடிகளின் இறப்பிற்குப்பின் வேறொரு குருவை கண்டிக்கு வரவழைக்க அரசன் தயக்கமின்றி உத்தரவு கொடுத்தான்.
• தூய யோசேப் வாஸ் முனிவரின் வேண்டுகோளுக்கு அமைய அருட்பணி சல்டானோ இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
• இலங்கை வர இவர் கன்னடம் சென்று பணியாற்றி அனுபவம் பெற்றிருந்தார்.
• 1703 மாசி மாதம் தன் பயணம் தொடங்கி புத்தளம் வந்து சேர்ந்தார்.
• இதையறிந்து யோசேப் வாஸ் அடிகளும் புத்தளம் வந்தார்.
• சல்டானோ வரும்போது யூபிலி வருட மன்னிப்பின் பலனைக் கொண்டு வந்தார்.
• யோசேப் வாஸ் அடிகள் இதைமக்களுக்கு அறிவித்து பாரிய ஒப்புரவு வழிபாட்டை ஒழுங்கு செய்து நடாத்தினார்.
• யோசேப் வாஸ் அடிகள் மீண்டும் கண்டி செல்ல சல்டானோ அடிகள் புத்தளத்தில் தங்கினார்.
• 1704 மார்கழி 27ல் கண்டி அரசனின் உத்தரவு கிடைத்த பின்னர் சல்டானோ அடிகள் கண்டி வந்து பணியாற்றினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யோசேப் வாஸ்

**எமது நாட்டின் திருத்தூதரான தூய யோசேப்வாஸ் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை இன்று எம் நாட்டில் கத்தோலிக்க திருச்சபை நிலைத்து நிற்கின்றது என்றால் அதற்கு காரணம் தூய யோசேப் வாஸ் ஆவார். எனவே அவர் பற்றியும் அவரது பணி பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியது நமது கடமையாகும். இம்மாதம் அவரது பணியினால் ஏற்பட்ட விளைவுகள் பற்றி அறிந்து கொள்வோம்.**

**1. இலங்கை கத்தோலிக்கத் திருச்சபைக்கு மறுவாழ்வு**

போர்த்துக்கேயர் காலத்தில் குருக்களால் நிறைந்திருந்த இலங்கை ஒல்லாந்தர் காலத்தின் ஆரம்பத்தில் குருக்களற்ற மண்ணாக மாறியது. தூய யோசேப் வாசின் வருகையுடன் மீண்டும் குருத்துவப் பணி தழைத்தோங்கியது. இலங்கைத் திருச்சபையின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்த காலத்தில் தூய யோசேப் வாசினால் இலங்கைத் திருச்சபைக்கு மறுவாழ்வு கிடைத்தது.

**2. கத்தோலிக்க விசுவாசத்திற்கு சாட்சியம்**

கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றியோர் தண்டணைக்கு ஆளாவர் என்ற ஒல்லாந்தரின் ஆணைக்குப் பயந்து பல கத்தோலிக்கர் தமது விசுவாசத்தை மறுதலித்தனர். பலர் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளாது வாழ்ந்தனர். தொழில் வாய்ப்புகளுக்காகவும் ஏனைய சலுகைகளுக்காகவும் பலர் கல்வின் மதத்திற்கு மாறினர். எனினும் தூய யோசேப் வாஸ் கொடுத்த ஊக்கத்தினால் பல கத்தோலிக்கர் தண்டணைகளுக்கும் பயப்படாமல் துணிந்து தமது விசுவாசத்தை அறிக்கையிட்டனர். இதனால் பலர் விசுவாசத்திற்காக உயிரையும் கொடுக்க முன்வந்தனர். டொன் பெத்ரோ போன்ற பொதுநிலைத் தலைவர்கள் ஒல்லாந்தரின் தண்டணைக்குட்பட்டு உயிரைக் கொடுத்தனர். இவ்வாறு தமது விசுவாசத்திற்காக வாழுகின்ற ஒரு புதிய தலைமுறையை தூய யோசேப் வாஸ் உருவாக்கினார்.

**3. நிலையான நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டமை**

போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கத் திருச்சபை முறையான நிர்வாக அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. பலர் பெயரளவுக் கத்தோலிக்கராக உருவாக்கப்பட்டனர். எனினும் தூய யோசேப் வாஸ் தாம் சென்ற இடங்களிலெல்லாம் விசுவாசத்தை மீளக் கட்டியெழுப்பியது மட்டுமல்லாமல், தனியான நிர்வாகக் கட்டமைப்பையும் உருவாக்கினார். ஒவ்வொரு கிராமங்களிலும் வாழ்ந்த கத்தோலிக்கருக்கு அவ்வூரை மையமாகக் கொண்ட தனியான ஒரு குட்டித் திருச்சபையை அவர் உருவாக்கினார். பொதுநிலைத் தலைவர்களை உருவாக்கி அவர்கள் மூலமாக தாம் இல்லாத காலத்தில் திருச்சபையின் பணிகள் தொடர்ந்து நடைபெற வழி உண்டாக்கினார். மூப்பர்களும் அண்ணாவியரும் மெலிஞ்சியாரும் தலத்திருச்சபையின் தேவைகளைப் பூர்த்தி செய்தனர். பிற்காலத்தில் இவ்வமைப்புக்கள் பங்கு மேய்ப்புப்பணிச் சபைகளின் அத்திவாரமாக அமைந்திருந்தன.

**4. ஆலயங்கள், அதனோடிணைந்த ஏனைய அமைப்புக்கள் உருவாக்கப்பட்டமை.**

ஒல்லாந்தர் காலத்தின் ஆரம்பத்தில் அவர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த இடங்களில் காணப்பட்ட கத்தோலிக்க ஆலயங்கள் அழிக்கப்பட்டன. எனினும் தூய யோசேப் வாஸ் தாம் சென்ற இடங்களில் முதலில் களிமண்ணாலும் ஓலையாலும் சிற்றாலயங்களை அமைத்தார். மக்களின் விசுவாசம் உறுதிபெற்ற பின் அவற்றை நிரந்தரக் கட்டடங்களாக உருமாற்றினார். புத்தளம், பரப்பாங்கண்டல், கண்டி போன்ற இடங்களில் குருமனைகள் உருவாக்கப்பட்டன. கண்டியில் வைத்தியசாலை ஒன்றையும் அவர் உருவாக்கினார். இவ்வாறு கத்தோலிக்கத் திருச்சபைக்கான நிரந்தர அமைப்புக்கள் உருவாகத் தொடங்கின. இவை போர்த்தக்கேய ~ இந்திய கட்டடக்கலை அமைப்பை பிரதிபலித்தன. இவற்றுள் சிலவற்றை இன்றும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.



**5. சுயமொழிப் பயன்பாடு**

போர்த்துக்கேயர் காலத்தில் இலத்தீன், போர்த்துக்கேயம் என்பன வழிபாட்டு மொழிகளாக இருந்தன. இதனால் பாமர மக்கள் திருவழிபாடுகளில் முழுமையாகப் பங்கெடுக்க சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. இதனால் போர்த்துக்கேயர் வெளியேற்றப்பட்ட போது இலங்கை மக்களுக்கு திருவழிபாடு வெறுமையான ஒரு சடங்காக கடநது போய் இருந்தது. எனினும் தூய யோசேப் வாஸ் இலங்கையின் சுதேச மொழிகளில் திருவழிபாட்டை மக்களோடு சேர்ந்து நிறைவேற்றினார். இதனால் விவாசிகள் முழுமையாக திருவழிபாட்டில் தம்மை இணைத்துக் கொண்டனர். அதனால் குருக்கள் இல்லாத சந்தர்ப்பங்களிலும் பல வழிபாடுகளை பொதுநிலையினர் மேற்கொண்டனர்.

**6. சுதேச கத்தோலிக்கத் திருவழிபாட்டு வடிவங்கள்**

போர்த்துக்கேயர் காலத்தில் சுதேச திருவழிபாட்டு வடிவங்கள் தோற்றம் பெற்றிருக்கவில்லை. எனினும் தூய யோசேப் வாஸ், அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் போன்றோர் கலை இலக்கிய வடிவங்களை திருவழிபாட்டுக்கு பொருந்தக்கூடிய வகையில் மெருகூட்டி மாற்றியமைத்தனர். இதனால் பல திருவழிபாட்டு வடிவங்கள் இன்று வரை பல நூற்றாண்டுகளாக கத்தோலிக்கர் மத்தியில் நிலைத்திருந்து விசுவாசத்திற்கு பக்கபலமாக அமைந்தன.

இலங்கையில் மேற்கு, வடமேற்கு கரையோரப் பகுதிகளிலும், வடக்கு மற்றும் நாட்டின் தனிப்பட்ட சில பகுதிகளிலும் இன்றும் இத்திருவழிபாட்டு வடிவங்கள் மாற்றமடையாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. உடக்குப் பாஸ்கு, பசாம், பாஸ்கா காட்டுதல், திரித்துவப்புகழ், யாத்திரைப் பாடல்கள் போன்றவை இவற்றிற்கு நல்ல உதாரணங்களாகும்.

எம் மறைமாவட்டத்தில் இன்றும் பசாம், பாஸ்கா காட்டுதல் போன்ற திருவழிபாட்டு வடிவங்கள் மூதூர் போன்ற பல இடங்களில் காணப்படுகின்றன.

**7. புதிய திசையில் திருச்சபையின் பயணம்**

கோவா, கொச்சின் போன்ற மறைமாவட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கைத் திருச்சபை பிற்காலத்தில் தனியொரு நிர்வாக அலகாக உருவாவதற்கு தூய யோசேப் வாஸ் மற்றும் ஒறத்தோரியன் சபை குருக்களின் பணியே காரணமாக அமைந்தது. இதன் முடியாக ஒறத்தோரியன் சபையைச் சேர்ந்த அருட்பணி அந்தோனியோ சுயத்தானோ இலங்கைத் திருச்சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்று ஒறத்தோரியன் சபையின் பணிகளுக்கு பெருமை சேர்த்தார்.

**8. பொதுநிலையினர்**

ஐரோப்பிய மறைப்பரப்பாளர்களால் உருவாக்கப்பட்ட கத்தோலிக்கத் திருச்சபை போத்துக்கேயர் காலத்தில் பொதநிலையினருக்கு சிறப்பான இடத்தைக் கொடுக்கவில்லை. எனினும் ஆசிய மறைபரப்பாளர்களான தூய யோசேப் வாஸ் மற்றும் ஒறத்தோரின் சபைக்குருக்கள் பொதுநிலையினருக்கு முதலிடம் கொடுத்தனர். இதனால் குருக்கள் இல்லாத வேளையிலும் தலத்திருச்சபைகள் சுயமாக இயங்கக் கூடியவையாக இக்குருக்களால் உருவாக்கப்பட்டிருந்தன.

**9. ஒறத்தோரியன் மறைபணியாளர்களின் நிரந்தரப் பணித்தளம்**

இலங்கை திருச்சபை ஐரோப்பிய மறைப்பரப்பாளர்களினால் உருவாக்கப்பட்டிருந்தாலும் ஒறத்தோரியன் சபையினராலேயே உறுதியாக நிலைநிறுத்தப்பட்டிருந்தது. இறைவனுடைய திட்டப்படி கோவாவில் உருவான இத்துறவற சபை இலங்கை மறைபரப்புப் பணியை மிகச் சிறப்பாக நிறைவேற்றி மத சுதந்திரத்தை கொடுத்த ஆங்கிலேயர் காலத்தில் அதனை மீண்டும் ஐரோப்பிய மறைபரப்பாளர்களிடம் ஒப்படைத்தது. இதன்பின் இத்துறவற சபையானது சிறிது சிறிதாக சிதைந்து அழிந்தது. இன்று இச்சபை எம்மத்தியில் இல்லை. இலங்கையின் விசுவாசத்தை பாதுகாக்க இறைவனால் உருவாக்கப்பட்ட இச்சபை அப்பணி நிறைவேறியதும் தேய்ந்து அழிந்து போனது வேதனைக்குரிய ஒரு விடயம் என்றாலும் அதுவே காலத்தின் நியதியாக உள்ளது.

**10. எதிர்கால இலங்கைத் திருச்சபைக்கான அத்திவாரம்**

ஆங்கிலேயர் காலத்தில் இலங்கைத் திருச்சபை 1834ம் ஆண்டில் தனித் தலத்திருச்சபையாக திருத்தந்தையால் பிரகடனப்படுத்தப்பட்டது. திருத்தந்தை 16வது கிறகோரியார் இலங்கையை கொச்சின் மறைமாவட்டத்திலிருந்து பிரித்து தனியான ஒரு அலகாக மாற்றியமைத்தார். ( Pope (Gregory XVI) by the brief Ex munere pastoralis ministerii of 3 December 1834 detached Sri Lanka from the diocese of Cochin after it had been part of it for 275 years (since 1558) and constituted it as a separate ecclesiastical territory, the Vicariate Apostolic of Sri Lanka).

இவ்வாறு தனித் திருச்சபையாக இலங்கைத் தோற்றம் பெற அத்திவாரம் அமைத்தது. தூய யோசேப் வாசும் ஒறத்தோரியன் சபைக்குருக்களுமாவர்.

**11. ஒறத்தோரியன் குருக்களின் கல்லறைகள்**

தமது மண்ணை விட்டு எம் முன்னோருக்காகவும் இயேசுவின் பணிக்காகவும் இலங்கைக்கு வந்த ஒறத்தோரியன் சபைக்குருக்களில் அனேகமானோர் இலங்கையிலேயே மரணமானார்கள். அவர்களில் அனேகமானோரின் கல்லறைகள் இன்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றன. தூய யோசேப் வாஸ், அருட்பணி யோசேப் கர்வால்கோ போன்றோரின் கல்லறைகள் காலத்தோடு மறைந்து போயின. போளவத்தை, புத்தளம், பரப்பாங்கண்டல் போன்ற இடங்களில் ஒறத்தோரியன் சபைக்குருக்களின் கல்லறைகள் இன்றும் காணப்படுகின்றன.

இலங்கையிலுள்ள அனைத்து ஒறத்தோரியன் சபைக்குருக்களின் கல்லறைகளிலும் காலத்தால் மிகவும் முற்பட்ட கல்லறை எம் மறைமாவட்டத்தில் காணப்படுகின்றது. இது மூதூரில் அமைந்துள்ள அருட்பணி மைக்கல் டி மெல்லோவின் கல்லறையாகும்.

**12. ஏனையவை**

தூய யோசேப் வாஸ் கத்தோலிக்கத் திரச்சபைக்க மட்டுமல்லாமல் இலங்கையின் கலை இலக்கியப் பகுதிக்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்கியுள்ளார். அதேபோல கலாச்சார விழுமியங்கள் பேணப்படுவதற்கும் அவர் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றார். இவ்வாறு 24 வருடங்கள் அவர் புரிந்த பணி இன்றும் எம் மத்தியில் பலன் தந்து கொண்டிருக்கிறது. அவர் தொடக்கி வைத்த பணி சக குருக்களால் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டது.

இன்று ஒரு புனிதரை எம் நாட்டின் திருத்தூதராக நாம் கொண்டிருக்கிறோம் என்றால் அது தூய யோசேப் வாஸ் எம் மண்ணில் புரிந்த பணிகளினதும், அவரது உதாரணமான வாழ்வினதும் பரிசாகும்.

இன்று அவர் எம் மண்ணில் தொடக்கி வைத்த மறைபரப்புப் பணி இன்னும் முழுமை பெறாது காணப்படுகின்றது. இயேசுவை அறியாதோர் மிக அதிகமாக இன்னம் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

**இத்தொடர் அடுத்த மாதத்துடன் நிறைவு பெறும்.**



**தூய யோசேப் வாஸ் ஆண்டுக்கான மாபெரும் வினாவிடைப் போட்டி**

- இவ்வருடம் தை மாதத்திலிருந்து திருமலைத்தீபம் பத்திரிகையில் தூய யோசேப் வாஸ் தொடர்பான பல்வேறு ஆக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- இக்கட்டுரைகள் அனைத்திலும் இருந்து வினாக்கள் உருவாக்கப்பட்டு இவ்வருடத்திற்கான இறுதி திருமலைத்தீபம் பத்திரிகையில் அவை வெளியிடப்படும்.
- இவற்றுக்கான விடைகளை எழுதி 06 ஜனவரி 2018 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக மறைக்கல்வி நடுநிலையத்திற்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பவும்.
- வயதெல்லை கிடையாது. தரப்படும் வினாக்களுக்கு மிக அதிகமான சரியான பதில்களை எழுதுவோர் மத்தியிலிருந்து முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடத்திற்குரியவர்கள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும். 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.
- இறுதி முடிவுகள் மறைக்கல்வி நிலையத்தினால் எடுக்கப்படும்.

**இலங்கையின் திருத்தூதரான தூய யோசேப் வாஸ் முனிவரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!**

அருட்பணி. எஸ். ஆர். ஜெயரெட்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறையாத வழிகளிவை

அருட்பணி N.C. அருள்வரதன்


ஆணவம் கொண்ட
நிலைகளினால்
ஆர்ப்பரித்தே எழும் வார்த்தைகளும்
நானென்ற மமதையும்
எனக்கென்ற எண்ணமிவை
உயர்ந்த மனங்களின்
சிந்தனைகளில்லையே

பணிவும் அடக்கம்
உதவும் மன உணர்வு
பொறுமை பகிர்ந்தளித்தல்
இவைகளெல்லாம் உயர்ந்த
அன்பின் அடித்தளத்தில்
வளர்ந்த வித்துக்களே

கல்வியில் வளர்ந்துயர்ந்து
பண்பாட்டில் சிறந்து வர
புதுநிலையின் உயர்வடிவாய்
பொலிவுபெறும் வாழ்வு அது
நிறைந்து அது மனங்களிலே
பெருகி எங்கும்
நிலம் பதித்து நின்றிடவே
மனிதவளம் பெருகி எங்கும்
புதுவாழ்வு துலங்கிடுமே

எம்மதமும் தீவினையை
எவருக்கும் சொல்லவில்லை
நன்மைகளை மறவாமல்
நமை அழைக்கும்
வழிகளிலே
நாம் வாழும் போது அங்கு
உண்மையில்
இறை ஆசீர்
எமை வந்து சேர்வதுண்மை

வாழ்வோம்
இறைவழியில்
வழிமாறிச் செல்லாமல்
நேர்வழியே அவ்வழியாய்
நிலைத்திடவே தொடர்வோமே





## உளநலப் பாதிப்புற்றோருக்கான தினம் ஒக்டோபர் – 10 – 2017

உளநலப் பாதிப்புற்றோருக்கென அவர்களும் சமுதாயத்தில் எல்லோருக்கும் சமமானவர்கள் என சர்வதேசமே அவர்களுக்கான தினமான ஒக்டோபர் 10ம் திகதியை ஒதுக்கியுள்ளார்கள். நாமும் அதற்கான திகதியை மட்டும் பேச்சளவில் கூறாது அவர்கள் மேல் உண்மையான சகோரத்துடன் அன்பாகப் பழகி இயலுமான உதவிகளைப் புரியவேண்டும். சில வசதியற்ற குடும்பங்களில் பொருளாதாரக்கல், ஏழ்மை, உதவியற்ற நிலையினால் பாதிப்புற்றவர்கள் கவனிக்கப்படுவதில்லை.

ஆரம்ப காலங்களில் இப் பாதிப்புற்றோர்கள் மிகமிகக் குறைவானவர்களாகவே இருந்தன. தற்போது அதிகளவில் உள்ளார்கள். இதற்குக் காரணம் நாட்டுயுத்தம், குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்களால் ஏற்பட்ட பாதிப்பு, மனவிரக்தி, ஏக்கம், முன்னர் ஏற்பட்ட சுனாமிப் பாதிப்பு, போன்ற காரணங்களேயாகும். இது நோயல்ல உளநளப் பாதிப்பேயாகும்.

இவர்களில் வசதியுள்ளவர்கள் அதற்கான மனைகளுக்கு அழைத்துச் சென்று விசேட நிபுணர்களிடம் காட்டி பரிகாரம் தேடுவர். வசதியற்றவாகள் கட்டுப்படுத்த இயலாமல் அப்படியே விட்டுவிடுவர். அவர்களும் வீதி வழியே அலைந்து திரிவர் ஊன் உறக்கமின்றி சீரான உடைகளின்றி திரிவது. ஏனையோருக்கு அவர்களை ஏளனப்படுத்துவதில் ஒரு பொழுதுபோக்காகிறது. அபிவிருத்தி செய்வதில் அக்கறை காட்டும் இவர்கள் மட்டில் இடைத்தங்கல் முகாம்களை அமைத்து அதன் வழியாக அவர்களுக்கு உதவிசெய்யலாம். மேலும் அவர்களுக்கு அவர்களுக்கேற்ப விதத்தில் சுய தொழிலில் ஈடுபட வைத்து அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தலாம் தற்போது வைத்தியசாலைகளில் வைத்திய பராமரிப்பதற்குத்தான் இந்த நிபுணர்களைக் கொண்ட வைத்தியர்களும் உள்ளார்கள்.

இருப்பினும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளவர்களைக் கவனிக்க எவருமில்லாமல் வீதிக்கு வருகிறார்கள் இவர்களை வைத்துப் முகாம்கள் தேவை அத்துடன் நேரத்திற்கு மருந்துகளைக் கொடுக்கவும் உதவி தேவை.


இது ஒரு நோயல்ல தாக்கங்களின் பாதிப்பேயாகும். என்னதான் பொருள்பண்டங்கள், பட்டம், பதவிகள் இருந்தாலும் எந்நேரத்தில் உளநலப்பாதிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்க இயலாது. சில வீடுகளில் மனைவிக்கு ஏற்பட்டால் கணவன் பிரிந்து வேறோரு திருமணத்திற்கு முனைகிறார்கள். அதே போல் கணவனுக்கு ஏற்பட்டால் மனைவியும் ஒதுக்கி விடுகிறார். ஏன் பிள்ளைகளும் கூட இப்படிப்பட்டவர்கள் இருந்தால் வெட்கம் என நினைத்து வீட்டை விட்டு வெளியே வீதி வழியே அலைந்து திரிய விடுகிறார்கள். இது போன்றவர்களுக்கே காப்பகங்கள் தேவை.
அன்பு நெஞ்சங்களே இவர்கள் மட்டில் அவர்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் அவர்களை ஏளனப்படுத்தாதீர்கள் துன்புறுத்தாதீர்கள் அவர்கள் மட்டில் அன்பாக இருங்கள் ஏனெனில் நாளை எம்மை ஏன் பாதிக்காது எனக் கூறிக் கொண்டு
இந்த ஒக்டோபர் 10ம் திகதியை முக்கிய நாளாக நினைத்து நினைவு கூறுவோம். என கூறும்..

அந்தோனிப்பிள்ளை



## தூய மத்தேயு ஆண்டு






### இறை பிரசன்னத்தின் சக்தி மத் (18: 19 ~20)

- நாம் செபிக்கிறோம். குடும்பமாக பங்குச் சமூகமாக, சிறிய கிறிஸ்தவ குழுமமாக செபிக்கிறோம். ஒரே கருத்தோடும் செபிக்கிறோம்.
- ஆனால் நாம் கேட்பதெல்லாம் எமக்குக் கிடைப்பதில்லை. ஏன்?

"இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்....."
(மத் 19:20)

1.
• செபம் ஒரு போதும் சுயநலமுள்ள செபமாக இருக்கக்கூடாது. சுயநல செபம் வெற்றியளிக்காது.

நாம் எமது தேவைகளுக்காக மட்டும் செபிக்கக் கூடாது.
• நாம் அன்புச் சமூகமாக செபிக்கவேண்டும். உலகம் அனைத்து உறவுகளுக்காகவும் படைக்கப்பட்டுள்ளது எனும் ஒன்றிப்பு உணர்வோடு செபிக்கவேண்டும்.
• எமது செபம் கேட்கப்பட்டால் இன்னொருவருடைய செபம் கேட்கப்படவில்லை என புரியலாம். ஒருவரது வெற்றி இன்னொருவரது தோல்வி.
• புரிதலிலும் ஏற்றலிலுமே செபத்தின் பயன் உள்ளது.



2.
• செபம் சுயநலமற்றதாக அமையும்போது அது கேட்கப்படும்.
• ஆயினும் செபத்தின் அடிப்படை சட்டத்தை நாம் புரிதல் வேண்டும்.
• அதாவது, செபத்தில் நாம் விரும்பும் பதிலை நாம் பெறுவதில்லை. மாறாக கடவுள் எமக்கு நல்லதென நினைப்பதே கிடைக்கும்.
• மனிதர் நாம் எமது பெலவீனம், பயம், விருப்பு, எதிர்பார்ப்பு காரணமாக எமது செபமெல்லாம் நாம் ஏதோ ஒன்றிலிருந்து தப்பிக்க எடுக்கும் ஒரு முயற்சியே.
• சோதனை, துன்பம். ஏமாற்றங்களிலிருந்து பாதுகாப்புத் தேர செபிக்கிறோம்.
• இறைவனின் பதிலோ இவற்றிலிருந்து விடுதலையல்ல, மாறாக வெற்றியே.
• இவற்றை எதிர்கொள்ள, அனுபவம் பெற, வெற்றிகான உதவுவதே இறைவனின் பதிலாகும்.
• இயேசு கெத்சமெனியில் செபித்ததும், அதற்கான பதிலும் எமக்குத் தெரியும்.
• கேட்டதைத் தரவில்லை. ஆனால் எதிர்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் சக்தி தருகிறார் இறைவன்.

3.
• யூதருக்கு ஓர் நம்பிக்கையுண்டு "எங்கு இருவர் அமர்ந்து சட்டத்தைக் கற்றுக்கொள்கிறார்களோ இறைவனின் அருள் அவர்களுள் உள்ளது."
• திருச்சபையில் செபக்கூட்டம், சிறிய கிறிஸ்தவ குழுமம் என பல சூழ்நிலைகள். இறைவன் எண்ணிக்கைக்கு அடிமைப்பட்டவர் அல்ல.
• உள்ளங்கள் ஒரே விசுவாசத்திலும் உணர்வோடும் ஒன்றிக்கும் போது செபத்தில் பலனுண்டு.
• குடும்ப சூழலில் இருவர் அல்லது மூவர் என்பது தந்தை, தாய், பிள்ளையைக் குறிக்கும், இயேசு அங்கு மறைமுக விருந்தாளியாக பிரசன்னமாகியிருப்பார் என்பது பழைய விளக்கமாகும்.
• என் விருப்பமல்ல, உம் விருப்பமே ஆகட்டும் என செபிக்கக் கற்றுக்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதம் பயணிக்கும் பாதை

*ஒரு சராசரி மனிதனாக எம் அனைவருக்கும் இறப்பு என்பது உண்டு. ஆனால் அது எப்போது? எப்படி? என்பதில் தான் வாழ்வின் சுவாரஸ்யமே அடங்கியுள்ளது. அதன்படி எம் வாழ்க்கை என்பது ஒரு பயணம் போன்றதாகும். காரணம் ஒருவர் சாதாரணமாக ஒரு பயணத்தை அதாவது ஒரு நெடும்பயணத்தை மேற்கொள்கிறார் எனில் அவர் அந்த பயணத்தில் பல இடங்களை, பல சந்தர்ப்பங்களை, பல நபர்களை. பல அனுபவங்களைத் தாண்டி பயணம் செய்ய வேண்டும். அப்போது தான் எமது பயணமும் சரி, பயணத்தின் நோக்கமும் சரி வெற்றி பெறும்.*

*இதுபோலவே தான் எமது வாழ்க்கைப் பயணமும் சாதாரணமான பயணத்திற்குமான ஒரே வித்தியாசம் சாதாரணமான பயணத்தின் நோக்கம் தெரிந்த பின்னரே நாம் பயணத்தை ஆரம்பிப்போமானால் வாழ்க்கைப் பயணத்தில் அப்படி அல்ல. எம் பயணத்தின் நோக்கத்தை நாம் பயணிக்கும் போது தான் அறிந்து கொள்வோம். இவ்வாறு எம் வாழ்வின் நோக்கங்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுபட்டதாக இருக்கும். ஆகவே பயணத்தின் இறுதி எமக்குத் தெரியாத ஒரு விடயம். ஒருவேளை தற்போதைய அறிவியல் வளர்ச்சியின் காரணமாக நீங்கள் இன்னும் 05 வருடமே அல்லது 05 மாதமே அல்லது 05 நாட்களே அல்லது 05 மணித்தியாலங்கள் மாத்திரமே உயிரோடு இருப்பீர்கள் என்று உங்களுக்குத் தெரிய வந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் உங்களது பதில் என்ன?*

*இந்தக் கேள்வியைக் கேட்டதும் பலரது பதில்களாக இருப்பது பல கஸ்டமான காரியங்களை, ஆபத்தான காரியங்களைச் செய்வேன், தூர இடங்களை தரிசிப்பேன், பாடசாலையை விட்டு நின்று விடுவேன் என பலவிதமான பதில்களை காணலாம். சரி, ஒரு பேச்சுக்கு இன்னும் 24 மணித்தியாலங்களில் நீங்கள் இறந்து விடுவீர்கள் என்றால் உங்கள் பதில் என்ன? பெற்றோரோடு இருப்பேன், தூங்க மாட்டேன், விரும்பியதை எல்லாம் உண்பேன் என பல பதில்கள வரும். ஆனால் ஒரு உண்மையான கிறிஸ்தவனாக எம்மிடம் கடவுள் எதிர்பார்ப்பது என்ன? நாம் செய்ய வேண்டியது என்ன?*

*இவ்வாறான கேள்விகளுக்கு பதில் மனம் மாறுதல், கிறிஸ்துவின் சாட்சியாய் வாழ்தல் ஆகும். எம் வாழ்வின் இறுதி நிமிடத்தில் மனம்மாறி கிறிஸ்துவின் சாட்சியாய் மாற எம்மால் முடியுமாயின் ஏன் இப்போது முடியாது. உங்களில் யாராவது உறுதியாய் கூறமுடியுமா நாளைய நாள் எப்படி? நான் உயிரோடு இருப்பேன் என்று, முடியாது காரணம் அது எமக்குத் தெரியாது. இப்படி இருக்கும் போது எப்படி நாம் எம் வாழ்வின் இறுதி மணிக்காக காத்திருக்க முடியும். கடவுளின் மகிமைக்காக என்ன செய்ய வேண்டும் என்பதை இப்போதே செய்வோம். ஏனெனில் இதுவே தகுந்த காலம். **நாம் இறக்கும் வரைக்கும் நாம் வாழும் ஒவ்வொரு நிமிடமும் எம் வாழ்வின் இறுதி நிமிடமே என நினைத்து நாம் செயற்பட வேண்டும்.***

*ஆகவே எம் நாட்டின் திருத்தூதரான தூய யோசேப் வாஸ் அடிகளாரின் கூற்றான 'நீ வாழும் போது செய்யாத காரியத்தை இறக்கும் தருவாயில் கூட உன்னால் செய்ய முடியாது என்பதை எம் வாழ்வில் வேத வாக்காக கொண்டு நாம் வாழும் ஒவ்வொரு நிமிடத்தையும் இறுதி நிமிடமாக கொண்டு வாழ்வோமேயானால் எம்மால் உண்மையான கிறிஸ்துவின் சாட்சியாகவும் எம் வாழ்க்கைப் பயணத்தின் இறுதியை அடைய முடியும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எனவே அன்பார்ந்த கிறிஸ்துவின் சாட்சிகளாக நாம் வாழ இந்த தூய யோசேப் வாஸ் ஆண்டில் உறுதிமொழியெடுத்து செயற்படுவோம்.*
*இதுவே தகுந்த காலம்..... இன்றே இறுதி நாள்...*

*அ. அனுஷாந்த் பொனிபஸ்*
*தூய யோசேப் வாஸ் சிறிய குருமடம்,*
*திருகோணமலை.*

# இளையோர் திறன் உயர........

**சென்ற இதழ் தொடர்ச்சி ................**

இவற்றின் தூய்மையே ஒட்டுமொத்தமாகச் சமூகத்தூய்மை. பொலிவியப் பேரொளி சேகுவேராவின் இதயக் கூட்டில் துப்பாக்கியை வைத்து அழுத்திய போது அவர் 'நான் புரட்சியின் சாகாத் தன்மையைத் தரிசித்துக் கொண்டு உள்ளேன்' என்று கூறி நின்றாரே... அதுதான் இளையோருக்குத் தேவையான உளவீரம். அதேநேரத்தில் வீரத்திற்கு நிதானம் தேவை என்பதையும் மறுக்க இயலாது.

இளையோரின் குறிக்கோள், செயல், சுதந்திரம், வீரம், போர்க்களம். நம்பிக்கை இவையெல்லாம் இளையோருக்குள்ளும், இளையோரிடமிருந்து சமூகத்திற்குப் பாய்ந்தோட வேண்டும். அந்தப் பாய்ச்சலில் **துடிப்பாக இயங்குவோம் நம் இதயம் இயங்கும் வரை......!**

**05. பதிவின் மனிதம்**

ஓவியர் ஹெல்மன், மெய் சிலிர்க்கும் ஓவியம் ஒன்றை வரைந்தார். அதில். மூடியிருக்கும் கதவை கடவுள் தட்டிக் கொண்டிருக்கிறார். பார்வைக்கு வைக்கப்பட்டது ஓவியம். பார்த்தவர் அனைவரும் பரவசம் அடைந்தனர். தத்ரூபமான ஓவியத்தைக் கண்டு வியந்தபடி சென்றனர். ஒரே ஒருவர் மட்டும் 'ஓவியத்தின் கதவில் சாவித்துவாரம் இல்லையே! சாவி இல்லாமல் கதவை எப்படித் திறப்பது?' என்ற கூறி ஓவியத்தின் மேல் குறை ஒன்றைச் சுட்டினார். அதற்கு ஓவியர் ஹெல்மன், தாழ்ப்பாள் உள்ளே இருக்கிறது. உள்ளே இருக்கும் நாம் தான் கடவுள் வரும் நேரத்தை உணர்ந்து திறக்க வேண்டும். தரிசனம் கதவைத்தான் தட்டும். தேவைப்பட்டவர் தாம் அதைக் கெட்டியாகப் பிடித்துத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும்', என்று பதில் கூறினார். இந்தக் கதை எப்போதும் **தயாராய் இரு** என உரத்துச் சொல்லுகிறது.

எப்போதும் பிறருக்காகப் பயன்படத் தயாராவது தான் மனிதத்தின் அடிப்படையாகிறது. பிறருக்காக பயன்பட வேண்டும் என்ற எண்ணத்திலே ஊறித் திளைத்தவர்கள் தான் மக்கள் மனதிலே ஆழமாய் இடம்பெற்றுள்ளனர். இவர்களெல்லாம் இன்னொரு முறை வந்து மாற்றம் கொண்டு வரப்போவதில்லை. சமூக மாற்றத்திற்காக களமிறங்கும் ஆற்றல் இளைய தோழர்களிடமே உள்ளது. அந்தத் தேவையை உணர்வதே காலத்திற்கேற்ற உண்மையான நகர்வு

காமராசரிடம் அவருடைய நண்பர்கள், 'தங்களைச் சிலையாக வடித்துச் சிறப்புச் செய்ய விரும்புகிறோம்', என விருப்பம் தெரிவித்தனர். 'சிலைக்கு எவ்வளவு ஆகும் என காமராசர் கேட்க, '10,000 ரூபாய் ஆகும்' என்றனர். 'ரொம்ப நல்லதாப் போச்சு! அதைக் கொடுங்கள். குழந்தைகள் படிப்பிற்குப்பணம் தேவைப்படுகிறது' என்றாராம். இவர்தானே மனிதத்தைப் பதிவு செய்த ஒப்பற்றத் தலைவர்! குருவிடம் சீடர் கேட்டார். 'குருவே, எப்படிப்பட்ட வாழ்க்கை சிறந்தது' குரு இப்டிச் சொன்னார்.

**களிமண் பொம்மையும் தண்ணீரும்**

களிமண் பொம்மையைத் தண்ணீரில் வைத்தால் களிமண் தண்ணீரில் தானும் கரைந்து தண்ணீரையும் கெடுத்த விடுகிறது.

**பஞ்சு பொம்மையும் தண்ணீரும்**

பஞ்சு பொம்மையைத் தண்ணிரில் வைத்தால் தண்ணீர் முழுவதையம் உறிஞ்சித் தான் மட்டுமே பருத்து விடுகிறது.

தொடரும்..................

நன்றி ~ விவிலிய விருந்து

# முக்கிய மூன்றுகள்

**அடக்க வேண்டியவை** ~ நா, கோபம், வேதனை
**அஞ்ச வேண்டியவை** ~ களவு. கோள். பொய்
**ஆதரிக்க வேண்டியவை** ~ வாக்குறுதி, நண்பு. பண்பு
**நேசிக்க வேண்டியவை** ~ நேர்மை. தூய்மை. கடின உழைப்பு
**மதிக்க வேண்டியவை** ~ முதியோர், மார்க்கம், சட்டம்
**தவிர்க்க வேண்டியவை** ~ பகைத்தல், மதுவருந்துதல். சூதாட்டம்
**வெறுக்க வேண்டியவை** ~ அகந்தை, அநீதி, வாக்குமீறல்
**ஒழிக்க வேண்டியவை** ~ சோம்பல். பொறாமை, பிடிவாதம்



தொகுப்பு : திருமதி பிறிஜட் சுரேந்திரா



**சோம்பேறி**
**யார்?**

**ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருப்பவன் மட்டுமல்ல இப்பொழுது செய்து கொண்டிருக்கும் வேலையைக் காட்டிலும், சிறப்பாக பணியாற்றவதற்கு உரிய திறமையும், வாய்ப்பும் இருந்தும் அப்படிச் செய்யாமல் இருக்கின்றானே அவனும் சோம்பேறி தான்.**

**தத்துவ ஞானி சோக்கிரட்டீஸ்**

# குடும்ப நற்பணிகள் ஆண்டு

- **"கிறிஸ்துவில் திருமணம்" பற்றி தூய பவுல் குறிப்பிடுகின்றார் (1 கொரி 7:39).**
- **இது குடும்ப சட்டங்களையும் கடந்து நிற்கின்றது.**
- **"கிறிஸ்துவில் வாழ்வு "என்பது ஆண், பெண், பெற்றோர், பிள்ளைகள், தலைவர், அடிமை எனும் நிலைகளைக் கடந்து நிற்கின்றது.**
- **"கிறிஸ்துவுக்குள் நாம் ஒருவரே" (கலா 3:28) எனும் சிந்தனையில் நம்பிக்கை வைப்போர் ஆண் - பெண் வேறுபாடுகளையும் கடந்து நிற்கின்றனர்.**
- **எபேசியருக்கு எழுதிய கடிதத்தில் தூய பவுல் மேலும் ஒரு அடிந கர்ந்து ஓசேயா (2:18-25) குறிப்பிடுவதைப் போல திருமணம் என்பது கடவுள் தன் மக்களோடு ஏற்படுத்திய உடன்படிக்கைக்கு ஒப்பிடுகின்றார்.**
- **இவ்வுடன்படிக்கை கிறிஸ்துவில் நிறைவடைகின்றது.**
- **இவ்வாறுஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படுத்தப்படும் உடன்படிக்கை இறைவனின் உடன்படிக்கைக்கு அடையாளமாகி கிறிஸ்துவில் நிறைவடைகின்றது.**
- **இந்த சிந்தனைமேலும் வளர்ந்து திருமணம் திருத்துவத்தின் அடையாளமாக, சமூக உறவாக வளர்ந்தது.**

- **அருட்சாதனம் எனும் நிலையில் திருமணம் பாவநாட்டங்களுக்குத் தீர்வாகவும் புனிதப்படுத்தும் அருளைபெறும் சாதனமாகவும் அமைகின்றது.**
- **குடும்பத்தில் புனிதத்துவம் பலசவால்களைத் தொடர்ந்து எதிர்கொள்கின்றது.**
- **காலத்துக்குக் காலம் குடும்பம் மனமாற்றம், ஒப்புரவு, புதுப்பித்தல் போன்ற நிலைகளைக் கடந்து செல்ல வேண்டும்.**
- **குடும்ப வாழ்வில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதைப் போல மூன்று விடயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். "தயவு செய்து", "நன்றி", "மன்னிக்கவும்."**
- **ஒருவருக்கொருவர் நேரம் ஒதுக்குதல், பாராட்டுதல், மன்னிப்பு, ஆசீர், பொறுமை, செபம், ஒப்புரவு, விட்டுக்கொடுத்தல், குடும்பமாக திருப்பலியில் பங்கேற்றல் குடும்ப வாழ்வுக்கு அவசியம்.**
- **பெரியவர்களைக் கனம் பண்ணுதல் மிக முக்கியமானது.**
- **திருவிவிலியம் செம்மறியின் இறுதிக்கால திருமணத்தோடு ஒப்பிடுகின்றது (திவெ 19: 7, 9).**
- **உலகத் திருமணம் இறுதிக்கால திருமணத்திற்கு முன்னடையாளம், முன்சுவை.**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் ஒரு சில வாழ்க்கைக் குறிப்புகள்

சென்ற இதழின் தொடர்ச்சி....

**53. நவகமுவையிலுள்ள தூய அன்னம்மாள் ஆலயம்.**

300 வருடங்களுக்கு மேலாக பழமை வாய்ந்த எமது நாட்டு ஒறத்தோரியன் சபையினரின் மறைபரப்பு மத்திய நிலையமாக விளங்கும் இவ்வாலயமானது கொழும்பு மறைமாவட்டத்திலுள்ள மிகப் பழமை வாய்ந்த தேவாலயமாகும். போர்த்துக்கேயர் காலத்திலும் இத்தேவாலயம் இருந்ததாக நம்பப்படுகின்றது.

**54. ஹங்வெல்ல**

அக்காலத்தில் ஹங்வெல்ல எனும் கிராமம் குருபாவில எனும் பெயரில் அழைக்கப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் மறை சுதந்திரம் வேண்டி கொழும்பில் இருந்து வந்த கத்தோலிக்கர்கள் பலர் இவ்விடத்தில் வியாபித்திருந்தனர். கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிய பயணத்தின் போது தூய யோசேப் வாஸ் அடிகளாரின் மறை தூது பணியை பெற்ற இடமாகவும் இத விளங்குகிறது. ஒருமுறை தூய ஜோசேப் வாஸ் அடிகளாரை ஒல்லாந்த படையினர் கைது செய்ய முற்பட்ட இடமாகவும் விளங்குகிறது.

**55. லிவரமென்தோ**

போர்த்துக்கேயர் காலத்தில் தேவ அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிரபல நான்கு தேவாலயங்களில் கொழும்பு உயர் மறைமாவட்டத்துக்கு அண்மையில் அமைந்த விடுதலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம் இதுவாகும். இது இன்று ஜாவத்தை மயான பூமியில் காணப்படுகின்றது. தூய யோசேப் வாஸ் அடிகளாரின் மறைதூதுப்பணியை பெற்ற இவ்விடத்தில் கிணறு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இதன் உடைபாடுகளை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. ஒல்லாந்தரின் கலகத்தின் போது இரவில் கத்தோலிக்கர்கள் அனைவரும் இவ்விடத்தில் ஒன்று கூடி செபமாலை கூறியதற்கான சான்றுகள் உள்ளன.

**56. பேருவளை**

களுத்துறை பிரதேசமானது பிரான்சிஸ்கன் சபை குருக்களின் பிரதான மத்திய நிலையங்களில் ஒன்றாக அழைக்கப்பட்டு வருகின்றது. ஒல்லாந்தரின் கலகத்துக்கு உட்பட்டிருந்த பேருவளை வாழ் கத்தோலிக்க மக்கள் யக்கமுல எனுமிடத்தில் (எகொடவத்த) மாமர பொந்து ஒன்றில் தூய அன்னம்மாள் சுரூபத்திற்கு முன்பாக மறைவாக ஒன்று கூடி செபித்தனர். இவ்விடத்திற்கு தூய யோசேப் வாஸ் அடிகளாரும் வருகை தந்ததாக சான்றுகள் காணப்படுகின்றன.

**57. தியலகொட**

'அக்கற மலை' அதாவது இன்று தியலகொட என்னும் பெயரால் அழைக்கப்படும் இக்கிராமத்தில் வாழ்ந்த கத்தோலிக்க மக்களைத் தேடி,கி.பி. 1699 ஜனவரி மாதம் 19ஆம் திகதி இப்பிரதேசத்திற்கு தூய யோசேப் வாஸ் அடிகளார் வருகை தந்திருந்தார். அப்போது தியலகொடவில் தென்னங்குருத்தினால் கூடாரம் ஒன்று அமைத்து தூய செபஸ்தியாருக்கு அர்ப்பணித்ததாக மக்களினால் கூறப்படுகின்றது.

**58. களமுல்லயையிலுள்ள குழந்தை இயேசுவின் ஆலயம்.**

கி.பி. 1699ல் களுத்துறை பிரதேசத்திற்கு வருகை தந்திருந்த தூய யோசேப் வாஸ் அடிகளார், களமுல்லை துறைக்கு பொறுப்பாக போதியாபதுகே வலந்தீனு பெரேரா அல்லது வலந்திறாலகே என்பவரின் வீட்டில் மூன்று வாரங்கள் தங்கியிருந்தார். அவ்வருடத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவன்று வலந்தீனு வீட்டுக்கு அண்மையில் தென்னங் குருத்தினாலான கூடாரம் அமைத்து திருப்பலி ஒப்புக் கொடுத்தார். 'ஆசீர் மிக்க பிறப்பு விழாவின் கூடாரமானது. என்றும் குழந்தை இயேசுவின் நாமத்தில் இருக்க வேண்டும்' என்பதே அவ்வருடத்தில் அவரது பிரார்த்தனையாக இருந்தது. அன்றிலிருந்து களமுல்ல தென்னங்குருத்துக் கூடாரம் குழந்தை இயேசுவின் பெயருக்கு அர்ப்பணிக்கப்பட்டு, இன்று



# மத்தேயு நற்செய்தி ஓர் அறிமுகம்

மத்தேயு காட்டும் இறையரசு

தொடர்ச்சி .................

இறையரசு எதிர்கால நிகழ்வு: 'இன்னும் முழுமையாக இல்லை' என்னும் நிலைப்பாடு இவ்வுலக நிகழ்வுகளைப் பற்றி கவலை கொள்ளாத, நிகழ்காலப் பிரச்சினைகளுக்கு எதிர்கால இறையரசு எப்படியாவது விடை கண்டுபிடித்து விடும் என்று நம்பியிருப்பதாக மாறிவிடும். இறையரசு எப்படியாவது நிகழ்கால நிகழ்வு எனக் கொண்டால் இவ்வுலகில் சில உலக இலக்குகளை அடைவதே இறையரசு. நாமே முழுக்க முழுக்க செய்து முடிக்க வேண்டிய ஒரு பணி என நம்புவதால் இறைவனின் திட்டத்தையும் செயல்பாட்டையும் கண்டு கொள்ளாத ஒரு மனநிலைக்கு ஆளாகிவிடுவோம். இவை இரண்டுக்கும் இடையே உள்ள சிக்கலை இரண்டாம் வத்திக்கான் சங்கத் தந்தையர் தெளிவாகவே உணர்ந்திருந்தார்கள். 'புதிய மண்ணகத்தை நோக்கும் எம் எதிர்பார்ப்பு இம்மண்ணகத்தை வளப்படுத்தும் அக்கறையை நம்மில் தளர்ச்சியுறச் செய்வதற்கு நேர்மாறாக அவ்வக்கறையை தூண்டிவிட வேண்டும். ஏனெனில் இங்குதான் மறு உலகின் ஒருவகை முற்காட்சியாகத் திகழக் கூடுமான புதிய மனித குடும்பம் என்னும் உடல் வளருகிறது. ஆதலின் மண்ணுலக முன்னேற்றத்தை கிறிஸ்துவினுடைய ஆட்சியின் வளர்ச்சியினின்று கவனமாக வேறுபடுத்துதல் தேவை என்றாலும், இம்மண்ணுலக முன்னேற்றம் மனித சமுதாயத்தை நன்மறையில் ஒழுங்குபடுத்த வழிவகுக்கும் அளவுக்கு கடவுளாட்சிக்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். (இன்றைய உலகில் திருச்சபை 39). எனவே, ஒருபக்கம் இவ்வுலகம் நிறைவான இறையரசின் முற்காட்சியாக' இருக்க வேண்டுமெனும் ஆவலில் நாம் ஒருமனப்பட்டு இறையரசின் நிறைவுக்காக உழைக்க வேண்டும். அதே நேரத்தில் உலக முன்னேற்றம், சாதனைகளையும் கடந்த நிலை, அதன் நிறைவில் அது முழுமையாக வெளிப்படும் என்னும் நம்பிக்கையில் காத்திருக்கவும் வேண்டும்.

மத்தேயு காட்டும் இறையரசு பற்றி சிந்திக்கையில் இயேசுவின் போதனையின் மையம் இந்த இறையரசு / விண்ணரசு, இயேசு இதை துவக்கி வைத்து (மத் 4:17) இதில் அங்கம் வகிப்பதற்கான அறநெறிகளை அளித்து (மலைப்பொழிவு) அதன் வருகைக்காக செபிக்கப் பணித்தார் (6:10), இந்த இறையரசு பணிக்கென தன்னை அரப்பணித்த திருத்தூதர்களின் பணிகள், செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என அறிவுறுத்துகிறார் (திருத்தூதுப் பொழிவு) மற்றும் விண்ணரசின் தன்மைகளை உவமைகள் மூலம் விளக்கிய இயேசு (உவமைப் பொழிவு), இந்த இறையரசின் தொடர்ச்சியாகவும் முன்சுவையாகவும் இருக்க வேண்டிய திருச்சபையிடம் இருக்க வேண்டிய பண்புகளை (திருச்சபைப் பொழிவு) விளக்கி ~ இறையரசின் நிறைவருகை எப்படி இருக்கும், அதை எவ்வாறு மேற்கொள்வது அதுபற்றி நமது மனநிலை என்னவாக இருக்க வேண்டும் என விவரித்து (நிறைவு காலப்பொழிவு) முடிக்கின்றார். எனவே இறையரசு தொடங்கப்பட்ட காலத்துக்கும் நிறைவு பெறும் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழும் நாம் அதன் நிறைவுக்காக நமது பங்களிப்பை அளித்து, நீதி, அன்பு, அமைதி என்ற பண்புகளில் திளைத்து, திருச்சபை வழி நின்று நிறை இறையரசை கட்டி எழுப்புவோம். அதன் நிறைவுக்காக நம்பிக்கையுடன் செபித்துக் காத்திருப்போம்.

திருத்தூதர்களை அழைக்கும்போது இயேசு மலைமீது ஏறி நின்றார் என்று மாற்கும் (3:13) லூக்காவும் (6:12) குறிப்பிடுகின்றனர். இதனைப் பின்னணியாகக் கொண்டு 'பேறுபெற்றோர் பொழிவை' இயேசு மலைமீது அமர்ந்து அளித்தார் என்று மத்தேயு அளிக்கிறார் (மத் 5:1). இப்படி மத்தேயு 'மலை' என்ற சூழலை அளித்ததற்கு பூகோள மற்றும் வரலாற்றுப் பின்னணிகளை ஆராய்வதை விட, இறையியல் காரணங்களைத் தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக மத்தேயு நற்செய்தியில் மலை என்பது இறைவெளிப்பாட்டின் இடமாகக் காட்டப்படுகின்றது. இயேசுவை அலகை மூன்றாம் முறை சோதித்த இடம் மலை (4:8). இயேசு தோற்றம் மாறிய இடம் மலை (17:1). உயிர்த்த ஆண்டவர் சீடர்களுக்குக் காட்சியளித்த இடம் மலை (28:16) ஆக இயேசுவின் வாழ்வில் மலை சிறப்பிடம் பெறுகிறது......

தொடரும்.........

நன்றி ~ விவிலிய விருந்து

சென்ற இதழின் தொடர்ச்சி....

# விவிலியத்தில் குடும்பம்

ஏன், அத்தனை உயிரினங்களையும் ஆளும் அதிகாரம் கூட இறைவனது ஆளுகைக்கு உட்பட்டது என்பதை அவர்கள் உணர்வார்ந்த முறையில் ஏற்று, இறைவனைச் சார்ந்து வாழ்வதே அவர்கள் தம் வாழ்வின் சாரம் என்பதைப் புரிந்து அதற்கொப்பத் தமது குடும்ப வாழ்வை வாழ்ந்து காட்டுவார்களா? இல்லை, தமது சொந்த விருப்பு வெறுப்பிற்கேற்ப, தான் தோன்றித்தனமாக வாழ முனைவார்களா? என்பதை சோதித்து அறிய ஒரு திட்டம் தீட்டினார். இருவிதக் கட்டளைகளைக் கொண்ட சோதனை அது: அந்த இன்ப வனத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் அவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்பது ஒன்று! இரண்டாவது, அந்த வனத்தைப் பயன்படுத்தும் உரிமை வரம்புக்கு உட்பட்டதே என்பதை உளமார ஏற்க வேண்டும் என்பது! அதாவது, அந்த மரத்திலுள்ள அனைத்துக் கனி மரங்களையும் தம் இச்சைக்கேற்றபடி பயன்படுத்த முடியாது. மாறாக, இறைவன் இட்டபடி ஒருசிலக் கனிகளை ஒதுக்கியே ஆக வேண்டும். அவர் போட்ட கோட்டை மீறலாகாது (தொநூ 2: 15, 16~ 17).

ஆக இறைவன் இட்ட இவ்விரு கட்டளைகளையும் கடைபிடித்துக் கடவுளின் திருவுளத்தை முன்னிருத்தி வாழ்ந்தால் மட்டுமே அவர்களின் குடும்ப வாழ்வு சிறப்புறும். இல்லையேல் சீரழியும்! இதுவே இறைவன் விதித்த தேர்வாய்வு! ஒரு சொல்லில் சொலின், 'இறை ஆட்சிக்கு உட்பட்டு வாழ்வார்களா? இல்லை, தம் இச்சைக்கு ஆட்பட்டு வீழ்வார்களா? இதுதான் இறைவன் குடும்பத்திற்கு விடுத்த சவால்!

அந்தச் சவாலை புதுமணத் தம்பதியரும் மனதார ஏற்றிருந்தனர் என்பது தான் வரலாறு! எந்த அளவுக்கு இறைவனை முன்னிருத்தித் தம் குடும்ப வாழ்வை வாழத் தொடங்கினார் எனின் எல்லாம் வல்ல இறைவனே அந்த வனத்திற்குள் அடிக்கடி வருவதும், உலவி உரையாடுவதும் மிகச் சாதாரணமாய் ஆகிவிட்ட பழக்கமாய் ஆனது (தொநூ 3: 8~9). அந்த அளவுக்கு மானுடத்தின் முதல் குடும்பத்தினர் இறைவனோடு நல்லுறவு கொண்டிருந்தனர் என்பது தெளிவு. இயற்கையோடும் அக்குடும்பம் ஒத்திசைந்த வாழ்வை நடத்தி வந்தனர் என்பதும் உண்மை. எல்லாக் காட்டு விலங்குகளும் வானத்துப் பறவைகளும் அவர்களின் அதிகாரத்திற்கே உட்பட்டு வாழ்ந்தன என்பதை ஏற்கெனவே திருநூல் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார் (தொநூ 2:19~20)! கர்ச்சிக்கும் சிங்கமாயினும் பாய்ந்து தாவும் புலியாயினும் சரி, நஞ்சே உருவான பாம்பாக இருப்பினும் எந்தப் பிராணியிடமிருந்தும் ஆபத்து இருந்ததில்லை! முட்செடியோ முட்புதரோ எந்த கொடுஞ்செடிகளும் அந்த வனத்தில் முளைத்திருந்ததில்லை (தொநூ3: 18)!

தவிர, அக்குடும்பத்தில் இருந்த கணவன் மனைவி இருவருமே தங்களுக்குள்ளேயே அமைதி பெற்ற மகிழ்வோடிருந்தனர். தங்களுக்குள்ளேயே எவ்வித முரண்பாடோ சலனமோ அடைந்து, குழப்பத்தில் மூழ்கியிருக்கவில்லை என்பதும் உண்மை! 'இருவரும் ஆடையின்றி இருந்தனர். ஆனால் அவர்கள் வெட்கத்திற்கு ஆளாகவில்லை' என்பதாகக் கூறும் தொநூ2:24 சொற்றொடர் அவர்கள் தத்தம் ஆளுமைக்குள் சீர்நிலையைப் பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுகிறது!

அது மட்டும் அல்ல, அவ்விருவருக்கிடையேயும் நல்லுறவும் ஒத்திசைவும் ஒருசேரக் காணக்கிடந்தது! ஒருவர் ஒருவருக்கிடையே எத்துணை மன ஒற்றுமையும் பரிமாறிக் கொள்ளும் பழக்கமும் இருந்தது எனின், கடவுள் ஆதாமிடம் கூறியிருந்த கட்டளையை (தொநூ 2: 16~17) ஏவாளும் உடனுக்குடன் ஆதாமிடமிருந்து பெற்றுக் கொண்டதோடு, அதைத் தமக்கும் இடப்பட்ட கட்டளை என்று ஏற்றுக் கொண்டாள்.

சுருங்கக்கூறின், மானுடத்து முதல் குடும்பத்தில், அதன் மகிழ்வுக்குத் தேவையான நான்கு வித ஒத்திசைவும் ஒருங்கிணைப்பும் மேலோங்கி இருந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி:




1. இறையோடு ஒத்திசைந்த வாழ்வு,
2. இயற்கையோடு ஒத்திசைந்த வாழ்வு முறை,
3. தமக்குள் நிலையான ஒத்திசைந்த அமைதி வாழ்வு
4. ஒருவர் ஒருவருக்கிடையே நிலவும் நல்லுறவு

எந்த ஒரு மானுடப்பிறவிக்கும் இந்த நாலுவித நல்லுறவு கிட்டிவிட்டால், அது சிறப்புற்றோங்கும்! அவ்வாறே நமது முதல் குடும்பமும் சிறப்புற்றிருந்தது.

ஆனால் இந்த இனிய வாழ்வு நீடித்து நிலைத்ததா? அதுதான் இல்லை! எந்தப் பகுதியைப் பயன்படுத்தக் கூடாது என்று கடவுள் கட்டளையிட்டாரோ அந்தப் பகுதிப் பக்கம் ஏவாளின் கால்கள் நடைபோடுகின்றன. எந்த மரத்துக் கனியைக் கடவுள் உண்ணலாகாது என்று விலக்கி வைத்தாரோ 'அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும்' இருப்பதாகப் பார்க்கிறாள். இதுவரை இறைவனையே முன்னிருத்தி வாழ்ந்த அவள், இப்போது வேறொரு புறத்தூண்டுதலுக்கு இடம் கொடுக்க முன்வருகிறாள்.

தொடரும் .............

நன்றி ~ விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறை அனுபவத்தின் ஓர் இனிய அழைப்பு

– கிறிஸ்டி முருகுப்பிள்ளை



தொடர்ச்சி ......

" சாரிகா" ...அமலோற்பவ சுவாமிகளின் சிந்தனையில் உதித்த ஒரு கலையரங்கம். வட்டவடிவமான இவ் அரங்கம் எந்தப்பக்கம் பார்த்தாலும் கலையம்சங்கள் பொருந்திய ஓவியங்கள். சிற்பங்கள். நவீன நுட்பங்கள். வசதிகள் அடங்கியதாக இருந்த அதே வேளை எளிமையானதாகவும் இருந்தது. உள்ளே நுழையும் போது எமது காலணிகளை மிகவும் பக்குவமாகவும் ஒழுங்காகவும் அடுக்கி வைக்கும் பழக்கத்தை அனைவரும் கடைப்பிடித்தனர். உள்ளே சென்றால் கருத்தரங்கின் பங்குபற்றுனர்களினதும் வளர்பகிர்வாளர்களினதும் எண்ணிக்கையளவில் மட்டும் கதிரைகள் வட்டவடிவில் அடுக்கப்பட்டிருந்தன. நிகழ்வு ஆரம்பமாகும் போதும் மதிய உணவு, தேனீர் இடைவேளைகளின் பின்பும் பிந்தி வருவோரின் கதிரைகள் வெறுமையாக இருந்து காட்டிக் கொடுத்துவிடும். " ஏம்பா யாரு வரல்ல.. டேய் பிரகாஸ் உன்ர பிரண்டு அலோசியஸ் எங்கேப்பா....ஏம்மா ..ராணி இந்த சிறீலங்கா பொண்ணுங்க எங்கேம்மா.." என்று லூயிஸ் சுவாமிகள் ஒரே பார்வையில் கண்டுபிடித்து விடுவார். ஓடவும் முடியாது...ஒழியவும் முடியாது.. அத்தனை கட்டுப்பாடு.

அன்றிரவு இராவுணவின் பின் வெளிமுற்றத்தில் பாய் விரித்து கீழே அமர்ந்து ஒன்று கூடல்.. அப்போது தான் லூயிஸ் சுவாமிகளும் தமிழ் நாட்டு அன்பர்களும் இலங்கைப் பிரச்சனைப் பற்றி அறிய சந்தர்ப்பங்களும் கிடைத்ததாக பயன்படுத்திக் கொண்டனர். " கிறிஸ்டி...உமது அனுபவம் எப்படி இருந்தப்பா.." லூயிஸ் சுவாமிகள் ஆரம்பித்து வைத்தார். நானும் மூதூர் இருதயபுரத்தில் 1997 ம் ஆண்டு விடுதலைப்புலிகளும் இருதயபுர இராணுவ முகாமைக் கைப்பற்ற முயற்சித்த வேளையில் இரு பகுதியினருக்கும் இடையில் எமது குடும்பம் அகப்பட்டு இறைவனருளால் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவத்தை மிகவும் உருக்கமாக விபரித்தேன். அத்தோடு அப்போதைய பயங்கர சூழ்நிலையில் இருந்து ஆண்டவர் எங்களை எவ்வாறு தூக்கிக் காப்பாற்றினார் என்பதை எடுத்துக் கூறினேன்.

தாங்கள் அறிந்த... கேள்விப்பட்ட விடயங்களை விட யதார்த்த சூழ்நிலை எவ்வளவு மோசமாகவும் பயங்கரமாகவும் இருந்ததை உணர்ந்து மேலும் எங்களைப் பரிவுடன் அணைத்துக் கொண்டனர் தமிழக நண்பர்கள். அன்றிரவு தான் ஆன் றொஸ்ரினா ஒரு சிறந்த பாடகி என்பதை அறிந்து கொண்டனர். " அம்மா ஆனு ஒரு பாட்டு பாடமாட்டியா" என லூயிஸ் சுவாமிகள் கேட்ட போது மறுக்காமல் ஒரு பாடலைப் பாடி அனைவரினதும் மனங்களில் இடம் பிடித்துக் கொண்டார் ஆன் றொஸ்ரினா.அதன் அதன் பின்பு ஆன் றொஸ்ரினாவின் பாடல்கள் பலிப் பூசைகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. மறுநாள் காலை 5 மணிக்கெல்லாம் பாக்கிய நாதன் எழுந்து காலைக் கடன்களையெல்லாம் முடிந்து ஐந்தரைக்கே தயாராகி விட்டார். ஐந்தே முக்காலுக்கே கண்விழிக்கிறான் பாக்கிய நாதன் தயாராகி விட்டதைக் கண்டு அதிர்ந்து விட்டேன். " சோலர் பலரினால் ( சூரிய மின்சார சக்தி) யினால் சூடாக்கப்பட்ட தண்ணீரும் உள்ளது சேர்...சரியான குளிர்..சுடு நீரிலேயே குளியுங்கள் என்றார். அவசரமாகக் குளித்து உடைமாற்றித் தயாரானேன். ஆறேகால்.. வெளியே வந்த போது எங்களிருவரைத் தவிர மற்றெல்லோரும் முற்றத்தில் போடப்பட்டிருந்த சிறு பாய்களில் அமர்ந்திருந்தனர். பிந்திய வெட்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் எஞ்சியிருந்த இரு பாய்களில் ஓடிப்போய் அமர்ந்து கொண்டோம்...முன்னால் லூயிஸ் சுவாமிகள் யோகா பயிற்சியை ஆரம்பித்தார்.

" மண்ணகமே..விண்ணகமே..ஆகாயமே.. படைப்புக்கெல்லாம் பேரொழி நீயே.." என்ற செபத்துடன் யோகா ஆரம்பமானது.. வெறுமனே பயிற்சி மட்டுமல்லாது. .பரலோக மந்திரத்தின் உச்சாடனத்துடன் யோகா முறைகளை ஒன்றிணைத்து ஒவ்வொரு நிலைக்கும் காரண காரியங்களையும் அதனால் உடலில் ஏற்படும் மாற்றங்கள் அதன் பயன்களையும் எடுத்துரைத்து யோகாசனப் பயிற்சியை நடத்திய விதம் அருமையாகவும் அவரின் அனுபவ முதிர்ச்சியும் தெளிவாகத் தெரிந்தது. அன்றிலிருந்து நாங்கள் உரிய நேரத்திற்கு ஐந்து நிமிடத்திற்கு முன்னே தயாராக இருக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டோம். யோகா பயிற்சியைத் தொடர்ந்து " சத் சித் ஆனந்தா" எனும் சிலுவை வடிவ ஆலயத்திற்கு பலிப்பூசைக்காக சென்றோம். அங்கும் பல ஒழுங்குகள்... எமது காலணிகள் வெளியே தெரியாமல் வேறுபக்கத்தில் ஒழுங்காக அடுக்கி வைத்துவிட்டு உள்ளே சென்றோம். " திராவிடக் கலை" யின் அடிப்படையில் அவ் ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது.

பலிப்பீடம் இரண்டடி உயரத்தில் வட்ட வடிவ தாமரை மலரிதழ்கள் சுற்ற வரப் பொழியப்பட்ட தனிக் கல்லினால் ஆனது. அதைவிட அவ் ஆலயம் கூட தனித்தனிக் கனவுருவான கருங்கற்களினால் அமைக்கப்பட்டிருந்து. ஒரே அளவிலான கருங்கற்கள் எங்குமே பயன்படுத்தப்பட்டிருந்தது சிறப்பானதாக இருந்தது.

அருட்தந்தை அமர்ந்த நிலையிலேயே பலிப்பூசை நிகழ்த்தினார். இந்திய கலாசார முறை கலந்ததாக தீபாராதனை, மலரஞ்சலி, தூபாராதனை .. போன்ற பல ஒழுங்குகள் வழக்கமான வணக்க முறையை விட வேறுபட்டிருந்தது. முழங்காலில் இருப்பதை விட " பஞ்சாங்க நமஸ்காரம்" வழக்கத்திலிருந்தது. வாசகங்கள் வாசிப்பதெல்லாம் பீடத்தில் அமர்ந்திருந்த நிலையிலேயே நிகழ்த்தப்பட்டது. வழிபாட்டு ஒழுங்கில் மாற்றங்கள் நிறைய இருந்தன. வாசகங்களின் போதும் எழுந்தேற்றத்தின் போதும் எழுந்து நிற்கும் நடைமுறை இருக்கவில்லை. அமர்ந்த நிலையிலேயே யாவும் நிகழ்த்தப்பட்டன. ஆனால் மிகவும் ஒழுங்காகவும் பக்தியாகவும் அமைதியாகவும் அமைந்திருந்தது சிறப்பானது. இங்கும் திரு மரிய மிக்கேல். செல்வி. ஆன் றொஸ்ரினா. திருச்சி சகாயராஜ் ஆகியோரின் பஜனைகள் மனதை உருக்கும் விதத்தில் அமைந்திருந்தன. கவனச் சிதைவில்லாமல் ஒருமித்த சிந்தனைக்குவிப்புச் சூழல் எங்களைப் பலிப்பூசையில் ஒன்றித்திருக்க உதவியது.

முதல் நாள் பலிப்பூசையின் பின்பு பாக்கியநாதனுக்கு ஒரு பெரிய நடைமுறைச் சந்தேகம் ஏற்பட்டு விட்டது. நடைபெற்ற பலிப்பூசையின் ஒழுங்கு சரியா .. அங்கீகரிக்கப்பட்டதா..எங்கும் இம் முறை நடைமுறைப்படுத்தப்படுமா...என்ற ஐயப்பாடுகளைப் பலருடன் பகிர்ந்து தனது கேள்விக்கான விடையைத் தேடத் தொடங்கி விட்டார். கலாநிதி ஜான் பொஸ்கோ அவர்கள் இதற்கான நீண்ட விளக்கத்தை பாக்கிய நாதனுக்கு வழங்கி ஐயப்பாடுகளை நீக்க முயற்சித்தார். எனினும் அன்றிரவு காட்சிப்படுத்தப்பட்ட " சிரிப்போம் சிந்திப்போம்" என்ற அகத்தியன் அவர்களின் பிரசங்க ஒளிப்பதிவினைக் காணும் வரை ஐயப்பாடு தொடர்ந்தது. அன்றைய கருத்தரங்கில் முக்கியமாக " குழு நிலையின் செயற்பாடுகள்" பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

- ❖ ஒரு குரு எப்படி இருக்க வேண்டும் ?
- ❖ தலைவர் பேசத் தூண்டுபவராக இருக்க வேண்டும்.
- ❖ பால், வயது, பிரதேச வேறுபாடின்றிய ஒரு சமத்துவ நிலை நிலவ வேண்டும்
- ❖ ஒருவர் பேசும் போது ஏனையோர் அமைதியாக இருந்து அதிலுள்ள நல்ல விடயங்களைச் சேகரித்தல் வேண்டும்.
- ❖ நாம் பேசும் போது எழுந்தமானதாக அல்லாமல் பிறர் கவனத்தைக் கவரும் படி இதயத்திலிருந்து பேச வேண்டும்.
- ❖ கால அளவு தெரிந்து பிறர் கேட்கும் படியும் பிறர் கருத்துக்களை ஏற்றுக் கொண்டும் முரண்படத் தயங்காமலும் சுருக்கமாகவும் உணர்ச்சி வசப்பட வேண்டிய இடத்தில் உணர்ச்சி வசப்பட்டு அறச் சினம் கொண்டவராகவும் பேச வேண்டும்
- ❖ உயிரோட்டமுள்ள குழுவாகச் செயற்படத் தேவையான Irise பற்றி விளக்கினார்

I – Initiation – ஆரம்பித்து வைத்தல்
R– Regulation – ஆற்றுப்படுத்தல் அல்லது ஒழுங்குபடுத்தல்
I – Information – தேவைப்பட்ட தகவல்களைக் கொடுத்தல்
S – Support – ஆதரவு வழங்கள்
E– Education – மதிப்பீடு செய்து பார்த்தல்

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு விடயம் பற்றியும் திரு மரிய மிக்கேல் அவர்கள் தெளிவாக விளக்கியமை சிறப்பான அமர்வாக அமைந்தது.

தொடரும்................

## ஹாய் குட்டிஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 31
2அரசர்கள் 13 ~ 25அதி வரை
விடைகள்

01. சல்லூம் (15: 13)
02. தங்கள் சொந்த (25: 21)
03. மனாசே (21: 01)
04. சமாரியாவுக்கு (18: 09)
05. எழுத்தன் சாப்பான் (22: 09)
06. மறைவாய் (17: 09)
07. சொந்த வீட்டில் (13: 05)
08. எசேக்கியா (19: 03)
09. பிள்ளைகள் (14: 06)
10. குரு உரியா (16: 16)

பங்குபற்றியவர்கள் : 26 பேர்
சரியான விடையளித்தோர் : 07 பேர்



### பரிசுக்குரியவர்கள்

| 1ம் பரிசு 500/- ரூபா | 2ம் பரிசு 300/- ரூபா | 3ம் பரிசு 200/- ரூபா |
|---|---|---|
| சரோனா. ஆர். எப் | எஸ். ஆரோன் | அ. புஸ்பவதி |
| 21/3, வித்தியாலயம் வீதி. | 48/204, | 432, அன்பவழிபுரம், |
| திருகோணமலை | விநாயகபுரம், | திருகோணமலை |

**பரிசுக்குரியவர்கள்**

01. எஸ். கயானி ~ அன்புவழிபுரம்
02. ரி. மேஷாக் ~ அன்புவழிபுரம்
03. ஆன்வஜிரா ~ பேராலயம்
04. செமீரா யோன்சன் ~ பேராலயம்

## மறைக்கல்வி கற்போம் ~27


01. யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தரிடமிருந்து தப்பிய தூய யோசேப் வாஸ் எங்கு சென்றார்?
**கண்டியரசனுடைய ஆட்சிக்குட்பட்டிருந்த பட்டணமாகிய புத்தளத்திற்கு**
02. சில்லாலை மக்கள் விசுவாசத்தைப் பாதுகாப்பதிலும் நல்வாழ்க்கை முறையிலும் சிறந்து விளங்கியதால் அவ்வூர் எப்பெயரால் அழைக்கப்பட்டது?
**'சின்ன உரோமை' என**
03. தூய யோசேப் வாஸ் இலங்கையில் தனது பணியை எத்தனை ஆண்டுகள் செய்தார்?
**ஏறக்குறைய 24 வருடங்கள்**
04. தூய யோசேப் வாஸ் அடிகள் எப்போது இவ் உலகத்தை விட்டுச் சென்றார்?
**1711.01.16**
05. 'இலங்கையின் பவுல் அடிகள் வாஸ் அடிகளாரே' என வர்ணித்த திருத்தந்தை யார்?
**தூய 2ம் அருள் சின்னப்பர்.**
06. மலைப்பொழிவின் பேறுகள் எத்தனை? (தூய மத்தேயு)
**08**
07. தூய்மையான உள்ளத்தோர் எதைக் காண்பார் என இயேசு திருவாய் மலர்ந்தார்?
**கடவுளைக் காண்பர்**
08. மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள், ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்கு கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும் என இயேசு யாரைக் குறித்து கூறினார்?
**தன் பொருட்டுத் துன்புறுவோரைக் குறித்து**
09. மத்தேயு நற்செய்தியில் இயேசு பலிப்பீடத்திற்கு காணிக்கை செலுத்துபவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என கூறுகின்றார்?
**சகோதர சகோதரிகளுடன் நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.**
10. கடவுளின் அரியணை, கால்மணை என மத்தேயு நற்செய்தி எதைக் காட்டுகிறது?
**விண்ணலகு ~ அரியணை**
**மண்ணுலகு ~ கால்மணை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி முடிவுகள் - 25

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பு | ■ | ஞா | பு | ப் | மா | று | இ | ம் | ■ |
| தி | ■ | ன | ■ | த | ■ | ன் | ■ | டு | ஆ |
| ய | ப | ம் | றை | லை | உ | றே | ■ | ண் | ன் |
| உ | ரு | நி | ன் | சி | ட | கி | த | வே | மீ |
| ட | கு | றை | சா | ற | ல் | டு | ன் | ள | க |
| ன் | ப | ந் | ச் | ந் | ஒ | ட் | ன | ள் | உ |
| ப | வ | த | ன | த | ன் | ரா | ல | கொ | ண |
| டி | ர் | ■ | ம | து | றே | பா | ம் | க் | வை |
| க் | ■ | அ | ழி | வு | ■ | ■ | ■ | டி | ■ |
| கை | க | ண் | ணா | டி | யி | ல் | ■ | மூ | ■ |

01. ஞானம் நிறைந்த
02. மனச்சான்று
03. தன்னலம்
04. உடல் ஒன்றே
05. பாராட்டுகிறேன்
06. இறுமாப்பு
07.ஆன்மீக உணவை
08. முடிக்கொள்ள வேண்டும்
09. அழிவு
10. தலைசிறந்தது
11. பருகுபவர்
12.புதிய உடன்படிக்கை
13. கண்ணாடியில்



போட்டியில் கலந்து கொண்டோர் : 84 பேர்
சரியாக விடையளித்தோர் : 64 பேர்

பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500.:-
திருமதி. D. மேரி கொன்சி
3ம் வட்டாரம்,
நிலாவெளி.

2ம் பரிசு
செல்வி. க. சுலக்ஷனா
இருதயபுரம்.
மூதூர்

3ம் பரிசு
செல்வன். யே. டிவெஞ்சன்
இல : 676, அன்புவழிபுரம்,
திருகோணமலை

பாராட்டுக்குரியவர்கள்

01. A. அனஸ்ட் டேமியன்~ நிலாவெளி
02. A.D. லெனோ ~ நிலாவெளி
03. எட்மன் கேமியன் ~ நிலாவெளி
04. இ. ஜெசூரன் ~ பேராலயம்
05. தே. சமில்டன் ~ நிலாவெளி
06. யே. தம்மிக்கா ~ அன்புவழிபுரம்
07. வெ. மதுஷாந் ~ இருதயபுரம்
08. V. டெரன்சியா ~ இருதயபுரம்
09. சு.சாருஜன் ~ இருதயபுரம்
10. வி. யனுக்ஷன் ~ இருதயபுரம்
11. S. சர்மிகா ~ இருதயபுரம்
12. வெ.யனதர்சன் ~ இருதயபுரம்
13. உ. தர்ஷிகா ~ இருதயபுரம்
14. வ.கிமாஷன் ~ இருதயபுரம்
15. ஞோ.அனிற்றா ~ இருதயபுரம்
16. சோ. பிஷேஷா ~ இருதயபுரம்
17.மோ. ரக்ஷனா ~ இருதயபுரம்
18. யே. அன் சபனினி ~ இருதயபுரம்
19. பெ. சசிகாந்தன் ~ இருதயபுரம்
20. V. வர்ஷா ~ இருதயபுரம்
21.ஞ. திஷானி ~ இருதயபுரம்
22. கே. பவித்திரா ~ இருதயபுரம்
23. ஜெனிஸ்டா ~ இருதயபுரம்
24. ர. வேணுகரன் ~ இருதயபுரம்
25. து. பிரதிக்ஷா ~ இருதயபுரம்
26. பெ. ஏஞ்சல் குரூஸ் ~ இருதயபுரம்
27. D. வேணுதர்சன் ~ இருதயபுரம்
28. ஜே. ரெபேக்கா ~ இருதயபுரம்
29. பி. விதுர்ஷினி ~ இருதயபுரம்
30. சி. ஹம்சாளினி ~ இருதயபுரம்
31. T. தட்சாயினி ~ இருதயபுரம்
32. S. கேசவி ~ இ குதயபுரம்
33. அ.சாளினி ~ இருதயபுரம்
34. K. கெனிஸ்டா ~ இருதயபுரம்
35. S. சதுஷிக்கா ~ இருதயபுரம்
36. R. லக்ஷனா ~ இருதயபுரம்
37. N. எமில்சியா ~ இருதயபுரம்
38. I. விதுசன் ~ இருதயபுரம்
39. ய. ரியட்ணா ~ இருதயபுரம்
40. அ. மதுசாலினி ~ இருதயபுரம்
41. செ. சசான் செபத் ~ இருதயபுரம்
42. R. அபிராமி ~ இருதயபுரம்
43. S. சர்மிஷா ~ இருதயபுரம்
44. S. தர்ஷன் ~ இருதயபுரம்
45. சி. யதுக்சன் ~ இருதயபுரம்
46. யூ. நிரூஸ்காந்த் ~ இருதயபுரம்
47. S. அபிலாஷினி ~ இருதயபுரம்
48. கோ. ரக்ஷியா ~ இருதயபுரம்
49. ரா. அன்ரனி சஜுஸ்கர் ~ இருதயபுரம்
50. M. திவுஷன் ~ இருதயபுரம்
51. வெ. றுக்ஷிக்கா ~ இருதயபுரம்
52. திரு. விமலதாஸ் ~ பேராலயம்
53. கு. டிலாஷன் ~ பாலையூற்று
54. கு.கிஷேலன் ~ பாலையூற்று
55. டொ. பியூலா ~ பேராலயம்
56. இ. நிவக்ஷிக்கா ~ பாலையூற்று
57. நிரஞ்சினி சொயிபாலா ~ பாலையூற்று
58. T. ரதீஸ்ராஜ் ~ அன்புவழிபுரம்
59. சு. கௌசல்யா ~ பாலையூற்று
60. சு.சுவேக்கா ~ பாலையூற்று
61. P. ஜெக்குலின் ~ கன்னியா

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 26
### 1கொரிந்தியர் அதி 14 – 16 வரை


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கு | | | எ | | | | | ஒ | |
| ■ | பீ | | | | | | | | ■ |
| கி | | | | ஆ | | | | | |
| | ■ | ■ | | | | | | தூ | ■ |
| | ■ | | த | | | | | | நா |
| | அ | ■ | | | | | | | |
| | | வி | | | | | | ■ | |
| மெ | | ■ | | | | | | உ | |
| ■ | | பு | | | | | ■ | ■ | ந |
| பா | | | | | | | | | |

01. மெய்......றிவு
02. கிறி.......து ஆ.....சியா......ர்
03. அக்.....யா
04. கு.......ல் எழு.......பும் ஒ......
05. அறி........லியே
06. பிறந்........ குழ.....தை
07.நன்.......
08. தூ..... முத்.......ம்
09. உ........ர் தரு.......
10. விண்மீ.....கள்
11. பாவ....... சாவி...... கொடுக்கு
12.தகு.......த நே.......ம்
13. புத்து......ர்
14. நா.......ந்து சொற்க.......

பெயர் :........................................
முகவரி :........................................
பங்கு :........................................


முடிவுத்திகதி : 25.11.2017

## மூன்று சொற்போட்டி – முடிவுகள்
Fr.NC



1. முக்காலம் I. இறந்தகாலம் II. நிகழ்காலம் III. இறந்தகாலம்
2. முத்தமிழ் I. இயல் II. இசை III. நாடகம்
3. மும்மலம் I. ஆணவம் II. கன்மம் III. மாயை
4. முத்தொழில் I. படைத்தல் II. காத்தல் III. அளித்தல்
5. மூவரசர் I. சேரன் II. சோழன் III. பாண்டியன்
6. இயேசுவைக் காணச்சென்ற மூன்று ஞானிகள்
I. கஸ்பார் II. வெவிச்சோர் III. வலத்துசார்
7. முச்சங்கம் I. முதற்சங்கம் II. இடைச்சங்கம் III.கடைச்சங்கம்
8. மும்முரசு I. வீரமுரசு II. கொடைமுரசு III. மங்கல முரசு
9. முக்குற்றம் I. காமம் II. வெகுளி III.. மயக்கம்
10. முப்பிணிகள் I. வாதம் II. பித்தம் III. சிலேற்பனம்

**05 பேரும் சரியாக விடையளித்தமையால் பரிசுத்தொகை ஐவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.**



பரிசுக்குரியவர்கள்

தனராஜா மேஷாந்
427, அன்புவழிபுரம்,
பாலையூற்று

டொ. தர்ஷிகா
மூதூர்

A. பெர்னாண்டோ
சின்னக்கடை
மன்னார்.

அ. யேசுதாஸன்
இல - 676,
அன்புவழிபுரம்

தே. சமில்டன்
3ம் வட்டாரம்,
நிலாவெளி

## வன்முறைகள் வேண்டாமே
Fr.NC



வன்முறைகள் பெருகுவதால்
துன்பங்களே விளைவுகளாகும்
படிக்கும் மாணவர்கள் சிறுபிள்ளைகள்
வல்லறவுக்குட்படுத்தி அவர்களை
கொல்லும் நிலைகள் பெருகியவை
கொடுமைகளாகத் தெரிகிறதே
வேண்டவே வேண்டாம் இந்த அழிவு நிலைகள்
வேரோடு இதனை அழிக்கும் போதே
அமைதிகள் நிறைந்த வாழ்வு தோன்றும்
ஆறுதல் நிலைகளை அனைவரும் காண்போம்

பங்குபற்றியோர் ~ 25 பேர்
சரியான விடையளித்தோர் ~ 03 பேர்

மூவரும் சரியாக விடையளித்தமையால் பரிசுத்தொகை சமமாக பிரித்து வழங்கப்படுகின்றது.

பரிசுக்குரியவர்கள்

K.புஸ்பம்
பாலையூற்று
300/-

காமலிற்றா விமலதாஸ்,
31, இராஜவரோதயம்
வீதி,
பேராலயம்
300/-

டொ. தர்சிகா
டிமெல்லோ இல்லம்,
மூதூர்
300/-

**பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய ரீதியிலான மறைமாவட்ட திருவிவிலிய வினாவிடைப்போட்டி - 2017








## புலமைப்பரிசில் பரீட்சையில் தி/லூர்து அன்னை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் 08 மாணவர்கள் சாதனை




## திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் நிகழ்வுகள்

## தூய குவாடலூப்பே திருத்தல திருவிழாத் திருப்பலி












2017




ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன் (தி.பா : 34: 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org